JANASAKTHI

REGD. NO. M. 5934

ஜனசக்தி

4 பக்கம் ஒரு அணு	மலர் 8 இதழ் 211		இலங்கை 10 சதம்
சென்னை	நந்தன, ஆடி 3௳	வெள்ளிக்கிழமை	1952, ஜூலை 18
வெளியூர்	நந்தன, ஆடி 4௳	சனிக்கிழமை	1952, ஜூலை 19

டெஹ்ரானில் ஊரடங்குச் சட்டம்

டெஹ்ரான், ஜூலை 18—

டெஹ்ரான் வீதிகளில் இன்று கவச மோட்டார்களும் டாங்குகளும் அணிவகுத்து நின்றன. ஊரடங்கு சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பதவியை மொஸ்ஸாதேக் ராஜினாமா செய்துவிட்டார். அகமது கவாம் சுல்தானே பார்லிமெண்டினால் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மொஸ்ஸாதேக் கட்சியைச் சேர்ந்த 30 பேர்கள் பார்லிமெண்ட் கூட்டத்திற்கு செல்லவில்லை. சுல்தானே தேர்தல் அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும், இத்தகைய முடிவுகளை எடுக்க பார்லிமெண்டில் 75 சத விகித மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்றும் அவர்கள் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

தாய் பிச்சை எடுக்கும்போது பிள்ளை கோதானம் கொடுத்தானும்!

"1931 கராச்சி காங்கிரஸில் 500 ரூபாய்க்கு மேல் மாதச் சம்பளம் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றிய காங்கிரஸ்காரர்கள்தான், இன்று கவர்னருக்கு வருஷத்திற்கு 10 லட்சம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இந்திய ஜனாதிபதி தங்கும் ராஷ்டிரபதி பவனத்தில் 60 தர்பார் மண்டபங்கள், 365 அறைகள் இருக்கின்றன. வருடம் ஒன்றுக்கு ஜனாதிபதி சம்பளம் 20 லட்சம் ரூபாய். அவருக்கு காய்கறிகள் தினமும் சிம்லாவிலிருந்து விமானத்தில் கொண்டுவரப்படுகிறது. இதெல்லாம் ஏழை மக்களின் வரிப்பணத்திலிருந்து கொடுக்கப்படுகிறது."

—தோழர் பி. ஸ்ரீனிவாசராவ், அருப்புக் கோட்டையில் விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் பேசியது.

"சுயராஜ்யமா அல்லது பேய் ராஜ்யமா?"

பார்லிமெண்டில் எதிர் கட்சியினர் வெளியேற்றம்

தடுப்புக் காவல் சட்டத்திற்கு கண்டனம்

புதுடில்லி, ஜூலை 18—

இன்று பார்லிமெண்டில் தடுப்புக் காவல் சட்டத்தைப் பற்றிய விவாதம் உச்ச கட்டத்தை அடைந்தது. கம்யூனிஸ்டு மெம்பர்கள் காங்கிரஸ் மெம்பர்களின் போக்கையும், சபாநாயகரின் போக்கையும் கண்டித்து சிறிது நேரம் சபையைவிட்டு வெளியேறினர். "சுமுகமான முறையில் விவாதம் செய்வதற்கு முடியாமலிருப்பதே நாங்கள் வெளியேறுவதற்குக் காரணம்" என்று ஹிரன் முகர்ஜி அறிவித்தார்.

நேற்று, தடுப்புக்காவல் சட்டத்தின் ஆயுளை 1954 டிசம்பர் 31ந் தேதி வரை நீடிக்கும் ஒரு மசோதாவை உள்நாட்டு மந்திரி கட்ஜு பார்லிமெண்டில் பிரேரணை செய்தார். "இந்த மசோதா எந்த ஒரு அரசியல் கட்சிக்கு எதிராகவே, அல்லது குறிப்பிட்ட அரசியல் கருத்துக்கு எதிராகவோ கொண்டுவரப்படுவதல்ல; நம் நாட்டின் தற்காப்புக்கு விரோதமாகவோ, வெளிநாடுகளுடன் நாம் கொண்டுள்ள உறவு பாதிக்கப்படும் வகையிலோ, உள்நாட்டு அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் முறையிலோ காரியங்கள் செய்பவர்களை எதிர்த்துத்தான இந்த சட்டம் பிரயோகிக்கப்படும்" என்றார்.

கம்யூனிஸ்ட் மெம்பர்கள் "இந்த சட்டம் எவ்வாறு மக்களின் மேல் தொடுக்கப்படும் ஒரு பாணம்" என்றும், இதன் ஆயுளை நீடிக்கவே கூடாதென்றும் பலமாக ஆட்சேபித்தனர்.

"நீங்கள் நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ண விரும்புகிறீர்கள். ராஜ்யத்தின் அமைதி பராமரிப்புக்கு எவ்வளவு பங்கு ஏற்படுகிறதோ, அவ்வளவு உங்களுக்கு மகிழ்ச்சி" என்று உள்நாட்டு மந்திரி கட்ஜு ஆத்திரமூட்டும் வகையில் பேசினார்.

கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் இதை பலமாக ஆட்சேபித்தனர்.

மசோதாவிற்கு ஏராளமான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"பொதுவான ஜீவாதார உரிமைகளுக்கு தடுப்புக்கா

(2-ம் பக்கம் பார்க்க)

வீடுகளைப் போலீஸ் கொள்ளையடித்தனர்; பெண்களை மானபங்கப்படுத்தினர்;

சட்டசபையில் காங்கிரஸ் எம். எல். ஏ. சகஜானந்தாவின் குற்றச்சாட்டுகள்

சென்னை, ஜூலை 17—

நேற்று சென்னை சட்ட சபையில் போலீஸ் மான்ய விவாதத்தின்போது, தஞ்சை ஜில்லாவில் 49-50 வருடங்களில் நடந்த பேய்த்தனமான போலீஸ் அட்டூழியங்களை காங்கிரஸ் எம். எல். ஏ. திரு. சகஜானந்தா புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார்.

செருப்பை வாயில் கவ்வச்செய்து திண்டுக்கல் தெருக்களில் தன்னை செத்த நாயைப் போன்று போலீஸ்காரர்கள் இழுத்துச் சென்ற கோரத்தை தோழர் மதனகோபால் எம். எல். ஏ. கல்லும் கரையும்படி எடுத்துரைத்தார்.

போலீஸ்காரர்கள் பெண்களைக் கற்பழித்த அக்கிரமத்தைப் பற்றியும், தொழிலாள, விவசாய ஊழியர்களை சித்திரவதைசெய்ததைப் பற்றியும் பல மெம்பர்கள் ஆக்ரோஷத்துடன் பேசினர்.

போலீஸ் மான்ய விவாதத்தின் போது காங்கிரஸ் எம். எல். ஏ. சாமி சகஜானந்தா கூறியதாவது: கம்யூனிஸம் பரவியதற்குக் காரணம் போலீஸும் தஞ்சை நிலப்பிரபுக்களும் ஏழை விவசாயிகளுக்கு இழைத்த கொடுமைகள்தான.

"தஞ்சையில் நடந்த அக்கிரமங்களைப் பற்றி நான் முன்னாளைய முதன் மந்திரி ராஜாவிடம் சொன்னேன். அவர் செவிசாய்க்கவில்லை. பிறகு போலீஸ் அக்கிரமங்களை நிறுத்த ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்தேன். முதன் மந்திரி ராஜா என்னைக் கூப்பிட்டு சீக்கிரமே எல்லாவற்றையும் பற்றி விசாரிப்பதாக வாக்குறுதி அளித்து எனது தீர்மானத்தை வாபஸ் வாங்கச் சொன்னார். ஆனால் இன்று வரை தஞ்சையில் நடந்த போலீசின் அட்டகாசங்களைப் பற்றி எந்த விசாரணையும் நடக்கவே இல்லை.

போலீஸின் அட்டகாசத்திற்கு இங்கு ஒரு சில உதாரணங்களைத் தருகிறேன.

13-5-50ல் தஞ்சையிலுள்ள நன்னுவரம் என்ற கிராமத்திற்கு போலீஸ் சென்று 20 தாழ்த்தப்பட்ட விவசாய மக்களை நையப்புடைத்து சித்திரவதை செய்தனர்.

ஆச்சான்புரத்திற்குள் நுழைந்தபோலீஸ், அங்குள்ள விவசாயிகளை அடித்து நொறுக்கியதுமின்றி அவர்களது சொத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்றனர்.

காப்பியக்குடியில்

தென்னை மரத்தில் ஏறிய நிரபராதியான ஒரு விவசாயியைக் கீழே இறங்கச் சொல்லி அவன் பிரக்ஞை இழக்கும் வரையில் சித்திரவதை செய்தனர்.

மஞ்சளாறு யிலுள்ள பெண்களை நிர்வாணமாக்கி அங்கிருந்த ஆண்கள் மேல் மூத்திரம் பேய செய்தனர்.

ஆதமங்கலத்தில் கம்யூனிஸ்டுக் கொடி இருந்ததால் பயந்து அங்கு போலீஸ் செல்லவில்லை. ஆனால் கம்யூனிஸமென்றால் இன்னதென்றே தெரியாத பக்கத்து கிராமத்திற்குச் சென்று விவசாயிகளின் குடிசைகளைப் பிய்த்தெறிந்து பானை சட்டிகளை உடைத்தனர்.

இன்னொரு இடத்தில் ஒருவன் தங்கையைவிட்டு அவன் மேல் மூத்திரம் பேய வைத்தனர்.

இந்தக் கொடுமைகளை நான் நேரில் விசாரித்துத் தெரிந்து கூறுகிறேன. இவைகளை இன்றைய சர்க்கார் விசாரித்ததுண்டா? இது சுயராஜ்யமா அல்லது பேய்ராஜ்யமா? என்று சாமி சகஜானந்தா ஆத்திரமும் ஆவேசமும் நிறைந்த குரலுடன் கேட்டார்.

இந்த அப்பட்ட உண்மையை காங்கிரஸ்காரரான சகஜானந்தா வேகமாக வர்ணித்து முடித்ததும் எதிர்கட்சி அங்கத்தினர்கள் ஆரவாரஞ் செய்தனர். காங்கிரஸ்காரர்கள் மந்திரிகள் முகத்தில் எள் விழுந்தால்பொரிந்துபோகும் போலிருந்தது.

போலீஸ் அட்டகாசத்திற்கு தோழர் கல்யாண சுந்தரத்தின் நிலை உயிருள்ள உதாரணம். ரங்கசாமி ரெட்டியார் போலீஸ் மான்யத்தை எதிர்த்து பேசுகையில்: திரு. ரங்கசாமி ரெட்டியார் (ஐ. ஜ. மு) போலீஸ் அக்கிரமத்தை வன்மையாக கண்டித்தார். போலீசார் கீழ்த்தரமான (மூன்றாவதுரக) முறைகளைக் கையாண்டு ஆட்சியின் மதிப்பைக் குறைக்கின்றனர் என்றார்.

சிவராமன் என்ற கம்யூனிஸ்டுக்கு இடமளித்து அன்னமிட்டதற்காக திருத்துறைப்பூண்டித் தாலூக்காவைச் சேர்ந்த துப்பட்டையில் ஒரு ஹரிஜனப் பெண் போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டாள். சில நாட்களுக்குப் பின்னர் அந்தக் கம்யூனிஸ்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

(2-ப் பக்கம் பார்க்க)

வாரம் குத்தகைதாரர்களைப் பாதுகாக்க

அவசரச் சட்டம் வரும்

சென்னை ஜூலை, 18—

வாரம் குத்தகைதாரர்களைப் பாதுகாக்கும் சட்டத்தை சர்க்கார் கொண்டுவர யோசனையுண்டா என்று கேட்ட கேள்விக்கு நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டம் சீக்கிரமே வருமென்று மந்திரி மாணிக்கவேலர் கூறினார்.

உடனடியாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து நிலப்பிரபுக்களால் விரட்டப்படுவதால் அதைத் தடுக்க ஏதாகிலும் வழியுண்டா என்று தோழர் கோவிந்தசாமி, வெங்கடேஸ்வரலு கேட்டதற்கு மந்திரி மாணிக்கவேலர் எந்தச் சரியான பதிலும் கொடுக்கவில்லை.

இதன்பிறகு தோழர் ராமமூர்த்தி, விரட்டப்படும் விவசாயிகளைப் பாதுகாக்க மற்ற காரியங்களுக்குச் செய்தது போல் ஏன் அவசரச் சட்டம் கொண்டுவரக்கூடாது என்று கேட்டதற்கு, இன்று சட்டசபை நடந்துகொண்டிருப்பதால் இது முடியாதென்றும், சீக்கிரமே அவசரச் சட்டம் கொண்டு வரப்போவதாகவும், இதைப் பற்றி எதிர்க் கட்சியினர் நம்பலாம் என்றும் முதன் மந்திரி ராஜகோபாலாச்சாரி கூறினர்.

இந்தியக் குடுமி அமெரிக்கர் கையில்!

எண்ணெ கம்பனி ஒப்பந்த விபரம் அறிவிக்க முடியாதென நிதி மந்திரி மறுப்பு

புதுடில்லி, ஜூலை 17—

இரண்டு அமெரிக்க எண்ணெக் கம்பெனிகளுடன் இந்திய சர்க்கார் செய்துகொண்ட ஒப்பந்த ஷரத்து விபரங்களை 'பொதுஜன நலனை' உத்தேசித்து வெளியிட முடியாதென இன்று மக்கள் சபையில் நிதிமந்திரி தேஷ்முக் அறிவித்தார்.

எண்ணெக் கம்பெனிகள் சம்பந்தமாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூறிய விமர்சனங்கள் மிகவும் பக்குவமற்றது" என அவர் கூறினர்.

எண்ணெக் கம்பெனிகளால் இந்தியாவிலிருந்து எடுத்து செல்லப்படும் லாபத்தைக் கட்டுப்படுத்துவதில் மாத்திரம் பெரிய அனுகூலமில்லை. இங்கு கம்பெனிகள் நிறுவப் படுவதால் இந்தியர்களுக்கு வேலை கிடைக்கிறது. அனுபவமும் ஏற்படுகிறது என நிதி மந்திரி மேலும் கூறினர்.

இந்தக் கம்பெனிகளில் போடப்படும் இந்திய மூலதனத்தின் அளவுபற்றியும், இவைகளின்மேல் இந்திய சர்க்காருக்குள்ள ஆதிக்கம் பற்றியும் தேஷ்முக் மேலும் பேசினர்.

"ஒரு கம்பெனியில் இந்திய மூலதனம் 25 சத விகிதமும், மற்றொரு கம்பெனியில் 2 அல்லது 3 கோடி ரூபாய்களும் இருக்கும்" எனக் கூறினர். "இந்த மூலதன விகிதத்தால் நடைமுறையில் பெரிய பாதகம் ஏற்பட்டு விடாது. சர்க்கார் மூலதனம் 51 விகிதமும், கம்பெனி மூலதனம் 49 விகிதமும் இருக்க வேண்டுமென்ற லக்ஷ்யம் மிகவும் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இன்றைய நிலைமையில் இந்திய சர்க்கார் 25 சத

(2ம் பக்கம் பார்க்க)

காஷ்மீரில் ஆக்ரமிப்பு

ஏகாதிபத்திய சூட்டு வெளிப்படுகிறது

புதுடில்லி, ஜூலை 17—

பாகிஸ்தான் பஞ்சாப் பிரதம மந்திரியாயிருந்த மாமுதாத் நவாப் காஷ்மீர் ஆக்கிரமிப்பை நடத்துவதற்கு தான பிரதமராயிருந்த காலத்தில் தன சொந்த பணத்திலிருந்து கொடுத்த ரூ. 68 ஆயிரத்தை இன்று பாகிஸ்தான் சர்க்காரிடமிருந்து திருப்பித் தரும்படி கேட்பதாக லாகூர் பத்திரிகைகள் கூறுகின்றன.

இது பற்றி பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன என்றும், பாகிஸ்தான சர்க்கார் ரூ. 16 ஆயிரம் கொடுக்கத் தயாரென்றும் தெரிகிறது. ஆனால் அவாமி லீக தலைவரான மாமதாத் நவாப், முழுத் தொகையையும் கீழே வைக்கும்படி கோருகிறாராம.

ஆக, பாகிஸ்தான் நிலபிரபுக்களின் பணமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கிரேசியின் ஜெனரல் ராணுவ ஏற்பாடுகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலும் சேர்ந்துதான், காஷ்மீர்மீது பாகிஸ்தான் ஆக்ரமிப்பு ஏற்பட்டதற்கு மூலகாரணம் என்ற சூட்டு வெளிப்பட்டுவிட்டது.

தென்னாற்காட்டில் உள்ள பழுப்பு நிலக்கரியை சுரண்டுவதற்கு அமெரிக்க கம்பெனி ஆசை!

சென்னை, ஜூலை. 17—

தென்னாற்காட்டிலுள்ள பழுப்பு நிலக்கரியை தோண்டி எடுப்பது சம்பந்தமாக இன்று ரயில்வே எரிபொருள் சிக்கன விசாரணைக் கமிட்டி சென்னை சர்க்கார் காரியாலத்தில் கூடியது. சென்னை சர்க்கார் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அமெரிக்க பழுப்பு நிலக்கரி நிபுணர் ஒருவர் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

நிலக்கரி கிடைப்பது கஷ்டமாக இருப்பதால், பழுப்பு நிலக்கரியை உற்பத்தி செய்தால் ரொம்பவும் உபயோகமாயிருக்கும். டன்னுக்கு 25 ரூபாய் வீதம் உற்பத்தி செய்ய முடியும். இக்கரியை மின்சார உற்பத்தி, இரும்பு மாங்கனீஸ் முதலியவை உற்பத்தி செய்வதற்கு உபயோகப் படுத்தலாம். மேலும் இது மைசூர், திருவாங்கூரிலுள்ள தொழில்களுக்கும் உபயோகப் படுத்த முடியும்.

பழுப்புக்கரி சுரங்கத்தின் பூர்வாங்க நிலையத்தை ஏற்படுத்த சுமார் 35 லக்ஷம் ஆகுமென்று சர்க்கார் கணக்கிட்டுள்ளது. ஆனால் சென்னை சர்க்கார் பணமில்லை என்று வேலையைத் தொடங்க தயங்குவதாகத் தெரிகிறது.

கமிட்டிக் கூட்டத்தில் ஒரு அமெரிக்க கம்பெனி வேறொரு இந்தியக் கம்பெனியுடன் சேர்ந்து சுரங்க வேலையை குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு உடனடியாக ஆரம்பிக்கத் தயாராயிருப்பதாயும் கூறப்பட்டது. அமெரிக்க கம்பெனிக்கு குத்தகை கொடுப்பது சம்பந்தமாக ஒரு முடிவும் செய்யப்படவில்லை. பூர்வாங்க வேலைகள் முடிந்தவுடன் இது ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

அமெரிக்க பெரு வியாபாரிகள் மகிழ்ச்சி

சென்னை ஜூலை 17—

"இந்திய சர்க்கார் மந்திரிகளும் இந்திய சர்க்காரின் கொள்கைகளும் அதுவும் குறிப்பாக அமெரிக்க எண்ணெக் கம்பெனிகள் இந்தியாவில் நிறுவப்படுவது பற்றி ஏற்பட்டுள்ள ஒப்பந்தமும் அமெரிக்க பெரு வியாபாரிகளுக்கு இந்தியாபால் நல்லெண்ண மேற்படச் செய்துள்ளது" என மாஜி திருவாங்கூர் திவான் சர் சி. பி. ராமசாமி அய்யர் கூறினர்.

"அமெரிக்க உதவியும், ஒத்துழைப்பும் பெற இந்தியா விரும்புவது கண்டு அவர்கள் மகிழ்ச்சி யடைந்திருக்கிறார்கள்" என அவர் மேலும் அறிவித்தார்.

புதுடில்லியின் அரசியல் யதார்த்த ஞானம்பற்றி பிரிட்டிஷ் பத்திரிகை பூரிப்பு!

புதுடில்லி, ஜூலை 17—

"காங்கிரஸ் தலைவர்கள் முன்னர் வகுத்த தேசிய கொள்கையை இன்று சிதறுண்டு போகிறது. [illegible] சட்ட திருத்த மசோதாவை மக்கள் சபை [illegible] இந்நாட்டிலும் அமெரிக்க பொருளாதார ஆதிக்கம் ஏற்படும்" என மக்கள் சபையில் அமெரிக்க சலுகை மசோதாவை எதிர்த்து கம்யூனிஸ்ட் தலைவர் ஹிரேன் முக்கர்ஜி பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மசோதாவைக்கண்டு அன்னிய மூலதனம் சந்தோஷப் பூரிப்படைகிறது என அவர் கூறினர். "டெஹ்ரானையும், கெய்ரோவையும்விட, புதுடில்லி [illegible] அரசியல் யதார்த்த [illegible]வும், தெளிவும் [illegible]ளது" என இந்திய [illegible] பிரிட்டிஷ் மூலத[illegible] கார பூர்வமான [illegible]கை கொக்கரித்துள்[illegible] அவர் சுட்டிக் காட்டின[illegible].

அமெரி[illegible]

[illegible] 73,00[illegible] தில் [illegible] ஒரு [illegible]

[illegible]பதை தோழர் முகர்ஜி எடுத்துக் காட்டினர்.

சீன இந்திய எல்லையிலுள்ள இப்பிரதேசம் மிகவும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தகைய கேந்திரமான பிரதேசத்தின் மீது எண்ணை சர்வே என்ற சாக்கு கூறி அமெரிக்க விமானங்கள் தாராளமாகப் பறந்து திரிய சர்க்கார் அனுமதி தந்துள்ளதை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

[illegible] எண்ணைக் கம்பெனிகளுக்கு [illegible] சலுகை இந்தி[illegible] [illegible]

தேர்தலில் ட்ரூமன் போட்டியிடுவார்?

வாஷிங்டன், ஜூலை 17—

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு மீண்டும் ட்ரூமன் நிற்க முடிவு செய்யக்கூடுமென்று வதந்திகள் பலமாக உலாவின. அதற்கு காரணங்கள் இரண்டு: ஒன்று, ஜனநாயக கட்சிக்கு வேறு நல்ல ஆள் கிடையாதென்று செனேட்டர் டாப்ட் ஜோசியம் கூறியது; இரண்டாவது, ட்ரூமனின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பது. ஜனாதிபதியின வேலை ஆளைக் கொல்லும் பாரம்" என்று ட்ரூமன் கூறியிருந்தாலும் அந்த [illegible]ரத்தை அவர் சுலபமாக [illegible]ந்துள்ளார். சமீபத் [illegible]டுமே ஜலதோஷம் [illegible] ஆஸ்பத்திரிக்குப் [illegible]ர். பி.டி.ஐ.

சட்டசபையில் கேள்வி நேரம்:

பாதுகாப்பில் வைக்கப்பட்ட தொழிலாளர்கள்

சென்னை, ஜூலை 18—

எத்தனை தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்று கேட்டதற்கு 368 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர் என்று முதன் மந்திரி பதிலளித்தார்.

ஒரு தாலூகாவிற்கு ஒரு பள்ளிக்கூடம் தானம்

வள்ளுவ நாடு தாலூகா விளயகாயிலியாடு என்றபிர்க்காவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டதை சர்க்கார் ஒப்புக் கொண்டதா என்று திரு. சங்கர நாராயண மேனன கேட்டதற்கு "ஒப்புக்கொள்ளவில்லை" என்றும், ஒரு தாலூக்காவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருந்தால் போதுமென்று கல்வி மந்திரி கூறினர்

ஒரு இடத்தின் தேவையையும், அங்கு ஆரம்ப பாடசாலை இருக்கிறதா என்பதை, ஹைஸ்கூலுக்கான செலவை பொருக்கக் கூடியதாகவும் இருந்தால் தான் ஓரிடத்தில் ஹைஸ்கூல் ஆரம்பிக்க சர்க்கார் ஒப்புக்கொள்ளும்' என்றும் கூறினர்.

பிரதிபலன் கிடைக்காதவருக்கும் வரி

டவுன் பிளானிங் சட்டப்படி ஒரு பகுதியில் இந்த சட்டத்தால் எவ்வித பிரயோஜனமடையாத ஏழைமக்கள் வாழும் பகுதிகளுக்கும் அபிவிருத்தி வரி போடுவது நியாயமா என்று திரு. கிஷ்ண ராவ் கேட்ட கேள்விக்கு, 'அவரவர் வசிக்கும் நிலத்தின் விலை உயர்ந்தால் அதனடிப் படையில் அபிவிருத்தி வரியும் உயர்த்தப்படு'மென்று கல்வி மந்திரி பதிலளித்தார்.

ஏழை மக்களை அனாவசியமாக தண்டிக்கும் போக்கல்லவா என்று கேட்டதற்கு முன்னர் கொடுத்த பதிலையே திருப்பிச் சொன்னார்.

ஆயுர்வேத மருந்துக்கும் தடையா?

தசமூலாரிஷ்டம், திருக்ஷரிஷ்டா என்ற ஆயுர்வேத மருந்துக்களை ஏன் சர்க்கார் தடை செய்துள்ளது என்று தோழர் கோபாலகிருஷ்ணன கேட்ட கேள்விக்கு 'இவைகளில் ஆல்கஹால் (அமிலம்) சேர்க்கப்படுவதால் தடை செய்யப்பட்டுள்ளன' என்று மந்திரி பழனிசாமி கவுண்டர் பதிலளித்தார். ஆயுர்வேத மருந்தை அதிகம் உபயோகிக்கும் ஏழை மக்களைத் தண்டனை செய்யும் கொள்கையல்லவா இது என்று கேட்டதற்கு தகுந்த பதில் சொல்லாமல் இதைப்பற்றி புனராலோசனை செய்யப்படுமென்றார் மந்திரி.

விவசாய வருமான வரி

ரப்பர், காபி, டீ போன்ற பெருந்தோட்டங்களுக்கு வருமானவரி விதிக்க சர்க்கார் தயாரா என்று கேட்டதற்கு இது பற்றி ஒரு கமிட்டி விசாரித்துள்ளது என்றும் வரிவிதித்தால் ரூ. 13 லட்சம் கிடைக்குமென்று இந்தக் கமிட்டி ரிப்போர்ட்டை சர்க்கார் கவனித்து வருவதாகவும் வி. ஆர். கிருஷ்ண அய்யர் கேட்ட கேள்விக்கு ரெவின்யூ மந்திரி பதிலளித்தார். தோட்டங்களுக்கு வரி விதிப்பதன மூலம் நல்ல வருமானம் கிடைக்குமென்று தெரிவதால் இன்று சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கும் புதிய வரிகளைப் போடாதிருப்பார்களா என்று கேட்டதற்கு, இந்தப் பிரச்சினை எழவில்லை என்று மந்திரி மாணிக்கவேலர் மழுப்பினர்.

அகதிகளுக்கு இடம்

இன்று பிச்சை எடுப்பவர்களை கவனிக்க சென்னை நகரம் உதக மண்டலம் போன்ற ஒன்றிரண்டு இடங்களில் தான் வசதி இருக்கிறதென்று ஸ்தல ஸ்தாபன மந்திரி பதிலளித்தார்.

இவ்விதம் பிச்சை எடுப்பவர்களை பராமரிக்க மாகாணமெங்கும் விடுதிகளை சர்க்கார் கட்ட முன்வருமா என்று தோழர் வெங்கடேஸ்வரலு கேட்டதற்கு, இந்த மாதிரி விடுதிகளை மாகாணத்தின பல இடங்களில் ஏற்படுத்தப் போவதாக முதன் மந்திரி குறுக்கிட்டு பதிலளித்தார்.

விலைவாசிகள் கொஞ்சம் ஏறியுள்ளன —மந்திரி

எங்கெல்லாம் அவசியமோ அங்கு நியாயவிலைக் கடைகளை நிச்சயம் திறப்போம் என்று நிதி மந்திரி சுப்பிரமண்யம் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

உணவுக்கட்டுப்பாடு நீக்கத்திற்குப் பின் பல இடங்களில் விலைவாசிகள் ஏறியுள்ளதை சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறதா என்று கேட்டதற்கு சில இடங்களில் விலைகள் ஏறியுள்ளதாகவும், சில இடங்களில் விலைகள் குறைந்துள்ளதாகவும் மந்திரி கூறினர்.

பத்திரிகைகளில் ரூ. 12-லிருந்து மூட்டை ரூ. 22 ஆக தமிழ்நாட்டில் பல இடங்களிலும் ஆந்திராவில் ரூ. 30 ஆக உயர்ந்துள்ளதே இதைக் "கொஞ்சம் உயர்ந்தது" என்று மந்திரி சொல்வது சரியா என்று தோழர் ராமமூர்த்தி கேட்டதும் "அது என்னுடைய அபிப்பிராயம்" என்று மந்திரி சுப்பிரமணயம் பதிலளித்தார்.

பரீட்சை எழுத வசதி

இன்று எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதும் மாணவர்கள் தூரமான இடங்களுக்கு பரீட்சை எழுதுவதற்காக செல்லவேண்டியிருப்பதால் மிகப் பெரும் கஷ்டத்தை விளைவித்திருப்பதை சர்க்கார் அறியுமா என்று தோழர் வெங்கடேஸ்வரலு கேட்ட கேள்விக்கு குறைந்தது 75 ஆண், அல்லது 30 பெண் மாணவர்களைக் கொண்டுதான் ஓரிடத்தில் பரீட்சை நடத்துவதாகவும் இதை ஆணும் குறைக்க முடியாதென்றும, எங்காவது அதிகக்கஷ்டமேற்பட்டுள்ளதை தெரிவித்தால் கவனிப்பதாகவும் மந்திரி கூறினர்.

தேர்தல் செலவு

சென்ற தேர்தலை நடந்த மாகாணத்திற்கு ரூ 87 லட்சம் செலவு ஏற்பட்டது என்றும் இதில் பாதியை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்றும், குறுகிய காலத்தில் தேர்தல் நடந்ததால் மரப்பெட்டிகள் உபயோகப்படுத்தப்பட்டதாக நிதி மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

நெசவாளர் நிலை

கைத்தறித் துணித் தேங்கியுள்ளதை சர்க்கார் வாங்கி விற்பனை செய்ய முடியாதென்றும உள்நாட்டில்தான் கைத்தறிக்கு மார்க்கெட்டு அதிகமிருக்கிறதென்றும அதனால் சில ரகத் துணிகளை மில்கள் நெய்யாமல் தடுத்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக் காவல் சட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்யுங்கள்

சென்னை, ஜூலை 18—

விசாரணையின்றி காவலில் வைக்கும் பாசிஸ்ட் சட்டமாகிய தடுப்புக் காவல் சட்டத்தின் ஆயுளை நீடிப்பதை எதிர்த்து கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்திக் கிளர்ச்சி செய்யுங்கள்.

தொழிற்சங்கங்கள், கிசான் சபைகள், வாலிபர் சங்கங்கள், இதர ஜனநாயக வாதிகள் அனைவரும் "தடுப்புக்காவல் சட்டத்தின் ஆயுளை நீடிக்காதே" என்று (ஆங்கிலத்தில் "No Extension Detention Act") இந்தியப் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் தந்தி அனுப்புங்கள். (தந்தியின் நகலை தோழர் ஏ. கே. கோபாலனுக்கும் அனுப்புங்கள், மிக அவசரம்! உடனே காரியத்தில் இறங்குங்கள்.

தமிழ்நாடு கமிட்டி
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின்மூலம் அது பரிபூர்ணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்க மாட்டோம்."

ஜனசக்தி

வெள்ளி 18-7-'52

வழக்குகளை வாபஸ் வாங்குக!

திருச்சி சதிவழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்த தோழர் கலியாணசுந்தரத்தின்மீதுள்ள வழக்கை சென்னை சர்க்கார் வாபஸ் வாங்கிவிட்டதை வரவேற்கிறோம். இதே கொள்கையை கடைப்பிடித்து, சர்க்கார் ...

போலீஸ் மான்யம் பற்றிய விவாதம்

சென்னை ஜூலை 17—

லெட்சுமி நாராயண ரெட்டி (ஐ. ஜ. மு.) பேசும்பொழுது இன்றுள்ள போலீஸ், ஏகாதிபத்தியத்தால் உண்டாக்கப்பட்டது என்றும், எந்தக்குற்றமும்புரியாத மக்களிடமிருந்து குற்ற வரிவசூலிக்கப்படுகிறதென்றும், சிறையிலுள்ளது போல் மக்களுடன் இணைந்து அவர்களுக்கு உண்மையில் சேவை செய்ய தகுதியற்ற போலீஸ் இருக்கக்கூடாதென்றும் கூறினார்.

அடுத்துப் பேசிய கம்யூனிஸ்ட் அங்கத்தினர் தோழர் ஐக்கராவ பேசிய பொழுது அவர் தாலுக்காவில் விவசாயத் தொழிலாளர்கள் ½ ரூபாய் சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்டதற்கு போலீஸ் 144 போட்டதென்றும், அவர் தொகுதியில் இரண்டு கம்யூனிஸ்டுகளைப் பிடித்து ...

அடுத்துப் பேசிய தோழர் எச். கனரன் அன்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் எவ்விதம் நம் மக்களை போலீஸ் நடத்தியதோ அதே விதத்தில்தான் இன்னும் நடத்துகிறது என்றார். கூலி கேட்கிற பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைக் கைது செய்வதுபோல் விவசாயிகளுக்கு கொடுமை புரியும் ஒரு ஜென்மியையாகிலும் ஒரு நிலப்பிரபுவையாகிலும் போலீஸ் இதுவரை கைது செய்ததுண்டா என்று கேட்டார்.

உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த எஸ். ராதாகிருஷ்ணன் 7 கோடி ரூபாய் அதிகச் செலவென்றும், அஹிம்சா மூர்த்திகள் கையிலுள்ள இன்றைய ஆட்சி, சத்தியத்தை கையாளும ராஜாஜியின் கையிலுள்ள அதிகாரம், நாட்டு மக்...

வெட்டுப் பிரேரணைக்கு வோட்டளித்தவர்கள் விபரம்

சென்னை, ஜூலை 17—

சலால் இலாகா கோரிக்கைக்கு சென்னை சட்ட சபையில் வியாழக்கிழமையன்று எதிர்க்கட்சித் தலைவரால் கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரேரணைக்கு ஆதரவாக 142 அங்கத்தினர்கள் ஓட்டளித்தார்கள். இதில் சோஷலிஸ்டுகளும், ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினரும் சேர்ந்துள்ளார்கள்.

கிரிஷிக்லோக் கட்சியினர் நடுநிலைமை வகித்தார்கள்.

எதிர்த்து வோட்டளித்தவர்கள் விவரம்:— காங்கிரஸ் 150, முஸ்லிம் லீக் 5, காமன்வீல் 5, பிரஜா கட்சி 7, எதிலும் சேராத சுயேச்சையாளர் 2, முற்போக்கு சுயேச்சைக் குழு 1.

போலீஸ் மான்யத்துக்கு ரூ. ஏழு கோடி சொச்சம்

விசேஷ ஆயுதப் போலீசும், புதிய போலீஸ் ஸ்டேஷன்களும் ஏற்படுத்தப்பட்டன!

சென்னை, ஜூலை, 17—

நேற்று சென்னை சட்டசபையில், இவ்வருட போலீஸ் மான்யத்துக்கு ரூ 7 கோடியே 10 லட்சத்து 82 ஆயிரத்து 100 கோரும் பிரேரணையை பிரதமர் ராஜாஜி கொண்டுவந்தார். சென்ற வருஷத்தைக் காட்டிலும் இத்தொகை சிறிது அதிகமென்றாலும் சாதாரண செலவுகளுக்கே இது கோரப்படுகிறது என்றார்.

ராஜாஜி இம்மான்யக் கோரிக்கையைப் பிரேரேபித்துப் பேசியதாவது:—

"1945-46 வருஷத்துடன் ஒப்பிடும்போது இத்தொகை அதிகம் தான், அதற்குக் காரணம் ...

... விட்டு சட்டசபைக்குள் வந்திருப்பதே என் கொள்கையின் வெற்றி என்றார்.

"கம்யூனிஸ்டுகள் தங்கள் தேர்தல் வெற்றிகளால் போதை கொண்டுள்ளனர்... ஆனால் தேர்தல் சட்ட மன்றங்கள் அல்ல; எவ்வளவு தேர்தல் முடிவுகளும் கோர்ட் முடிவுகளைப் பொய்ப்பித்து விட முடியாது... வெறும் குற்றச்சாட்டுகளை சட்டசபையில் கூறிக் கொண்டேயிருந்தால் முடியாது. சென்ற காலத்தில் நடந்ததை மாற்றிவிட முடியாது, அதைப் பற்றி பரிசிலனை செய்யவும் முடியாது. அவ்வாறு செய்ய நான் ஆரம்பித்தால் பலர் என்னை நிந்திப்பார்கள். ஆயினும் தன்னுடைய அதிகாரத்திற்குள் நியாயமாக உட்பட்டவை ஏதேனும் இருந்தால், சரியாக சம்பவங்களைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் என்னிடம் கொண்டு வரப்பட்டால், அதை கவனிப்பேன் என்று என் சார்பிலும், என் உத்யோகஸ்தர்கள் சார்பிலும் உறுதி கொடுக்கிறேன்" என்றார், பிறகு போலீஸ் மான்யம் வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பார்லிமெண்டில் எதிர்க் . .

(முதற் பக்கத் தொடர்ச்சி)

வல் ஒரு விதிவிலக்கு; அரசியல் சட்டத்திலேயே இதற்கு வழி செய்யப்பட்டுள்ளது; மாகாண சர்க்கார்களும் இத்தகைய ஒரு சட்டம் மிகவும் அவசியம் என்று கூறியுள்ளனர் என்று கட்ஜு கூறினார்.

இன்று காலை எதிர்கட்சியினர் இம்மசோதாவை எதிர்த்துப் பேச முடியாதவாறு காங்கிரஸ் அங்கத்தினர்கள் கூச்சலிட்டுகுழப்பம் விளைவித்தனர்.

இது பற்றி சபாநாயகருக்கும், தொழிலாளர் விவசாயிகள் கட்சித் தலைவர் திரு. மோரேயிக்கும் சிறிது வாக்குவாதம் நடைபெற்றது. இறுதியில் மோரே சபையை விட்டு வெளியேறினார்.

பிறகு சபாநாயகர், தோழர் அனந்தநம்பியாரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் அடிக்கடி இடைமறித்துப் பேசுவதாகவும் சபாநாயகரை அவமதிப்பதாகவும் குறிப்பிட்டார். "சபாநாயகர் தன் விஷயத்தில் நியாயமாக நடந்து கொள்வதில்லை" யென்று அனந்தநம்பியார் குறை கூறினார். அவ்வாறு கூறியதை வாபஸ் வாங்கும்படி சபாநாயகர் கேட்டதற்கு நம்பியார் மறுத்தார்.

உடனே சபாநாயகர் நம்பியாரை சபையை விட்டு வெளியேறும்படி உத்திரவிட்டார். பலவந்தமாகத் தன்னை வெளியே தள்ளினால்தான் அப்புறப்படுத்த முடியும் என்றார் நம்பியார். உடனே சபாநாயகர் சபைக் காவலாளியை (மார்ஷல்)க் கூப்பிட்டு நம்பியாரை வெளியேற்ற உத்திரவிட்டார். இரண்டு வரிசை பெஞ்சு...

காங்கிரசின் ஊதாரிச் செலவுக்கு வரி உயர்வா?

அருப்புக்கோட்டை, ஜூலை 13—

அருப்புக்கோட்டை தாலுகா விவசாயிகள் சங்க ஊழியர்கள் கூட்டம் 12-7-52 பிற்பகல், சொக்கலிங்கபுரம் எலெக்ட்ரிக் தியேட்டரில் நடைபெற்றது. கடந்த நான்கு வருடங்களாக விவசாயிகள் விளைச்சலில்லாமலும் கண்மாய் மராமத்து செய்யாமலும், வரிவஜா செய்யாமலும் பஞ்ச நிலைமைக்கு ஆளாகிப் பரிதவிப்பதையும், விலைவாசி வீழ்ச்சியால் பருத்தி, நிலக்கடலை, வத்தல், பல்லி ஆகிய பணப்பயிர்கள் செய்து வந்தவர்கள் ஓட்டாண்டிக...

... உணவு அபிவிருத்தி என்ற பேரால் வீண் செலவு செய்துவிட்டு, நீர்ப்பாசனமில்லாத பாலைவனப் பிரதேசங்களுக்கு அபிவிருத்தி வரி, சாசார்ஜ் என்றெல்லாம் விதித்து விவசாயிகளை ஒட்ட உறிஞ்சத் திட்டமிட்டிருக்கிறார். ஆனால், தேயிலை, காப்பி, ஏலம் போன்ற பணப்பயிர்கள் விளையும் லட்சக்கணக்கான ஏக்கர் வெள்ளை முதலாளிகளின் வளமான தோட்டங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2, 2-8-0 தான் வரி விதிக்கப்படுகிறது.

ஆனால், ரூ. 50, 60 வருமானம்வரும் நஞ்சை நிலங்களுக்கு ரூ. 10 முதல் 18 வரை வரி ...

144 தடை உத்தரவு!

அருப்புக்கோட்டை ...

பம்பாயைப்பார்

...

மஞ்சூரியா மீது அமெரிக்க போர் விமானங்கள்!

பீகிங் ரேடியோ தகவல்

டோக்கியோ, ஜூலை 18— ...

இந்தியாவுக்கு தாய்லாந்து அரிசி

புதுடில்லி, ஜூலை 17— தாய்லாந்திலிருந்து 1,60,000 டன் அரிசி ... 15—9—52ல் ...

சட்டசபையில் கேள்வி நேரம்

(முதற்பக்கத்தொடர்ச்சி)

...

38 ஆயிரம் மாணவரின் மகஜர்

...

கல்வி மானிய விவாதம்: கட்டாய இலவசக் கல்வி வேண்டும்!

...

காங்கிரஸ் முன்னேற்றம்

பம்பாய, ஜூலை 17— ...

சுயராஜ்யமா அல்லது பேய் ராஜ்யமா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

...


போலீஸ் பற்றி

...

இந்திய குடிமி......

(முதல்பக்கத் தொடர்ச்சி)

...



வடசென்னை தனுஷ்கோடி: கேள்வி: [illegible]

[illegible]

...யும், ஜனசக்தியும் வட்டாமல் கூறி வந்திருக்கின்றன. ஆனால் இந்தப் பிரச்னையில் ஆந்திரக்காரரிடத்திலும் மலையாளி இடத்திலும் தமிழனுக்கு துவேஷத்தை மூட்டுவதும் அந்த துவேஷத்தில் தன்னை வளர்ப்பதுமே தமிழரசுக் கழகத்தின் திருப்பணியாக இருந்து வந்திருக்கிறது.

ஆகவே 'மொழிவழி மாகாணம் உடனடியாக அமையாது செய்யும் இனவெறிக்கு இடம் தருவது அழகல்ல' என்று 'ஜனசக்தி' ஆந்திர, கேரள கிளர்ச்சிக்காரர்களில் ஒரு சாராருக்கு முறையிட்டதை 'தமிழரசுக் கழகத்தை இனவெறி கொண்டது' என்று சொன்னதாக அர்த்தப்படுத்தி, 'ஜனசக்தி'யை 'துரோகி' 'விரோதி' என்றெல்லாம் தமிழ் முழக்கம் வசைபுராணம் பாடியிருக்கிறது. "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுப்பது" இயல்பு தானே?

நிலப்பிரபுத்துவத்தின் மன[illegible]ரைசியின் அடியாள் தலையாளான காங்கிரஸாட்சிக்கு பிரசாரப்படையாக மாறிவிட்ட தமிழரசுக் கழகம், தமிழரசுக்கு இடம் தர மறுக்கும் நேரு சர்க்காருக்கு வாய்முரசாகப் பணிபுரிந்துவரும் 'தமிழரசுக் கழகத் தமிழ் முழக்கம்' 'ஜனசக்தி'யை 'ஆந்திர மாகாணத்திற்கு ஜர்தாப்படை வேலை' செய்யும் செய்தித்தாளென்று தான் வரையறுக்கும் காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம மஞ்சளாக்கத்தானே தோன்றும்?

—ஜீவா

தாய்மொழியில் பேச உரிமை வேண்டும்!

மலையாளத்தில் தோழர் இம்பிச்சி பாவா பேச்சு

புதுடில்லி, ஜூலை 17— [illegible]

துணி விலை குறைப்பு பற்றி காங்கிரஸ் சவடால்

புதுடில்லி, ஜூலை 16— [illegible]

மாதூர் சங்கத்தை பலப்படுத்துக!

பொன்மலை, ஜூலை 17— [illegible] ...அங்கத்தினர்களாக சேர வேண்டுமென்றும், இன்னும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ந-கி.)

உங்கள் பத்திரிகை ஜனசக்திக்கு நிதி உதவுங்கள்

நிலத்திலிருந்து வெளியேற்றும் கொடுமை பரவுகிறது!

மிராசுதார்-போலீஸ் கெடுபிடி

அடுதுறை, ஜூலை 17— [illegible] ...காரர்களையும், பந்தநல்லூர் போலீஸ் கைது செய்து, பாபநாசம் சப்ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

நில வெளியேற்ற பிரச்சினை விவசாய தொழிலாளர்களை மிகவும் பாதிப்பதாக இருந்தும் அதுபற்றி உடனே தக்க நடவடிக்கை எடுக்காமல், பிரபல மிராசுதார்களுக்கு அனுசரணையாக போலீஸ் இருந்து கொண்டு விவசாயிகளைக் கைது செய்வது அநீதியாகும்.

சுப்ரமண்யம் கமிட்டி ரிப்போர்ட்டுக்குப்பின் நடைபெற்றுள்ள நில மாற்றங்களெல்லாம் செல்லாதென்று சர்க்கார் அவசரச் சட்டம் பிறப்பிப்பதுதான் முறையாகும். (ந.கி.)

தபால் சிப்பந்திகள் கோரிக்கை தினம்

புதுக்கோட்டை, ஜூலை 17— அகில இந்திய தபால் சிப்பந்திகள் யூனியன் முடிவுப்படி, ஜூலை 14ம் தேதியை 'கோரிக்கை தின'மாக புதுக்கோட்டை தபால் ஆபீஸ் சிப்பந்திகள், தபால்காரர்கள் அனுஷ்டித்தனர். கோரிக்கை தின பாட்ஜுகளை தங்கள் சட்டைகளில் குத்திக் கொண்டிருந்தனர்.

முனிசிபாலிடி - சர்க்கார் லடாய்!

மதுரை, ஜூலை 17— மதுரை முனிசிபாலிடியின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெற்றுவந்த மதுரை மின்சார சப்ளைக் கம்பெனியை குமாரசாமி ராஜா சர்க்கார் முனிசிபாலிடியின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக சென்னை சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொண்டது. சென்னை சர்க்காருக்கும், மதுரை முனிசிபாலிடிக்கும் இது சம்பந்தமாக இருந்த தக[illegible]

பிரயாணிகள் தலையில் வரியைச் சுமத்தாதே!

[illegible] ...சார்ஜ் வசூலிப்பது, [illegible]க் கணக்கு வைத்துக்கொள்வதும் பெரிய தொல்லை பிடித்த வேலையென்றும் அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

உணவு மந்திரியிடம் பேட்டி

ஐதராபாத், ஜூலை 17— ஐதராபாத் சோஷலிஸ்டுக் கட்சியின் சார்பில் [illegible] கோஷ்டி மத்திய [illegible] ஜனாப் ரபி அகமது [illegible] சந்தித்த[illegible] தேச உணவுக [illegible] ரத்து, உணவு [illegible] உயர்வு சம்பந்தமா[illegible] அடிப்[illegible] தெரிவித்தனர். மந்திரி [illegible] அவர்களை [illegible] குறைப்பது [illegible] அரிசி ச[illegible] பந்தமாக [illegible] உறுதிய[illegible]

தொழிலாளர் ஒற்றுமை உணர்ச்சியை தலைவர்கள் மதிக்கவேண்டும்

ஹார்பரில் கோரிக்கை

சென்னை, ஜூலை 17— 16-7-52 மாலை 6 மணிக்கு [illegible] ...தொழிலாளர் நல் வாழ்விற்காக இராப் பகலாக அரும்பாடு பட்டுவரும் தொழிற்சங்க இயக்க அனுபவம் பெற்ற தோழர்கள் ஜீவானந்தம் எம்.எல்.ஏ., ஏ.எஸ்.கே. அய்யங்கார் எம்.ஏ. ஆகிய இருவரையும் தோழர் கிருஷ்ண நாயர் சங்க உபதலைவர்களாகப் பிரரேபித்தார். இது சம்பந்தமாக தோழர் ஏ.எஸ்.கே. ஒரே சங்கத்தில் வேலை செய்ய தானும் ஜீவாவும் தொழிலாளர் விருப்பப்படி தயார் என்று எழுதியுள்ள கடிதத்தை கிருஷ்ண நாயர் கூட்டத்தில் வாசித்துக் காட்டினார். அமோக ஆதரவு கூட்டத்தில் இருந்தது.

இதைக்கண்ட தலைவர் தோழர்கள் ப. ஜீவானந்தம் ஏ.எஸ்.கே. அய்யங்கார் ஆகியோரிடமிருந்து தனித்தனியாக கடிதம் பெற்று வரும்படி தொழிலாள தோழர்களிடம் கூறினார். காரசாரமான விவாதிற்கிடையே தோழர் நா. ஷண்முகனார் யோசனையின் மீது சங்கத் தேர்தலை ஒத்தி வைத்து 23-7-52-ல் மீண்டும் புதுத் தேர்தல் நடத்துவதென்று கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. (ந.கி.)

சிலோன் இந்தியருக்கு வாக்குரிமை தர மூன்று மத குருக்கள் வற்புறுத்தல்

கொழும்பு, ஜூலை 17— "சென்ற தேர்தலில் ஓட்டுப் போட்ட 2 லட்சம் இந்தியர்களுக்கு இப்போது இனவெறி சட்டம் காரணமாக வாக்குரிமை மறுக்கப்படுகிறதென்றால் அதற்கு எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டியது அவசியம்" என்று சிலோனிலுள்ள மூன்று மதகுருமார்கள் கூறியுள்ளார்கள். சிலோனைத் தங்கள் நிரந்தரத் தாயகமாகக் கொண்டுள்ள எல்லா இந்தியர்களும் சிலோன் பிரஜைகளாக அங்கிகரிக்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தியுள்ளனர்.

ஒத்திவைப்பு

ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களை ஒரு ஆண்டுக்கு சிலோன் அரசாங்கம் ஒத்திவைத்துள்ளது.

பிரஜைகளல்லாதோரை ஓட்டளிப்பதிலிருந்து தடுப்பதற்காக சட்டங்களை, பார்லிமெண்டு தேர்தலுக்கிருந்தது போல, கொண்டுவரவே இவ்வாறு ஒத்திவைத்திருப்பதாக ஸ்தல ஸ்தாபன இலாகாவின் நிரந்தர காரியதரிசி திரு. குணவர்த்தன பி.டி.ஐ. நிருபரிடம் கூறினார்.

தபால் யூனியன் கோரிக்கைகள்

மந்திரியிடம் பேச்சு வார்த்தை

புதுடில்லி, ஜூலை 17— அகில இந்திய தபால்காரர், கீழ்த்தர சிப்பந்திகள் யூனியன் ஏற்படுத்தியுள்ள பேச்சுவார்த்தைக் கமிட்டி திரு. அசிந்த்ராம எம்.பி. (யூனியன் உப தலைவர்) தலைமையில் யோக்குவரத்து மந்திரி திரு. ஜகஜீவனராமைச் சந்தித்து. 1946ல் நடந்த வேலை நிறுத்த காலத்திற்கு சம்பளம் அளிக்கப்பட வேண்டும் என கமிட்டி வற்புறுத்தியது. விவரம் உடனே நீடிக்கும்.

நடக்கவிருப்பவை

சென்னை: திருவல்லிக்கேணி[illegible]வின் சார்பில் 19-7-52 [illegible] மணிக்[illegible] தோப்பு [illegible]தெருவில் [illegible]

இராமநாதபுரம் ராஜாவுக்கு ½ கோடி ரூபாய் நஷ்ட ஈடா?

ஜமீன் ஒழிப்பு மோசடி பற்றி தோழர் சீனிவாசராவ் கண்டனம்

இராமநாதபுரம், ஜூலை 17— ஜமீன்தாரி ஒழிப்பு திட்டம் என்று காங்கிரஸ் சர்க்கார் நடத்திவரும் லட்சணத்தை தமிழ்நாடு விவசாய சங்கப் பொதுக்காரியதரிசி தோழர் சீனிவாசராவ் திரு. முதுகுளத்தூர் இன்று நடைபெற்ற விவசாயிகள் சங்கப் பொதுக் கூட்டத்தில் தோலுரித்துக் காட்டினார்.

இன்று ஆச்சாரியார் மந்திரி சபையில் ரேஸ் மந்திரியாக இருக்கும் இராமநாதபுரம் ராஜாவுக்கு 50 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடாகவும், 2000 ஏகர் நிலத்தை சொந்தமாக வைத்துக் கொள்ளலாமென்று அனுமதித்திருப்பதுதான், காங்கிரஸ் ஜமீன் ஒழிப்பின் மோசடி என்று அவர் விளாசினார்.

குமாரசாமி ராஜா, காமராஜ் நாடார் காங்கிரஸ் பரம்பரையிலேயே, இன்று முதன் மந்திரியாகவுள்ள ஆச்சாரியாரும் ஜன-விரோத பட்ஜெட்டைக் கொண்டு வந்து, ஏழை விவசாயிகளுக்கு அதிக வரிப் பளுவைச் சுமத்தி அவர்கள் வயிற்றிலடிக்க ஆரம்பித்துள்ளாரென்பதையும் எடுத்து விளக்கினார்.

நிர்வாகத்தில் நிலவும் லஞ்ச ஊழலையும், இந்த ஜில்லாவில் நிலவும் லஞ்ச அக்கிரமங்களையும் எதிர்த்து மக்கள் போராட முன்வர வேண்டுமென்றும், ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சி ஏற்படப் பாடுபட வேண்டும் என்று பேசினார்.

ராஜபாளையம் உகாண்டா பருத்தி

மதுரை, ஜூலை 17— உகாண்டா பருத்தி பதிவு முறை விதிகளை சற்று இவ்வருடம் தளர்த்த வேண்டுமென டெக்ஸ்டைல் கமிஷனருக்கு சிபார்சு செய்து இந்திய மத்திய பருத்திக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இப்பதிவு முறைப்படி ராஜபாளையம் பருத்தி (உகாண்டா) விளைவிக்கும் விவசாயிகள் பருத்தி சாகுபடியாகும் ஏக்கர் நிலத்தை சர்க்கார் விவசாய இலாக்காவில் பதிவு செய்து கொள்ளவேண்டும். இவ்விதம் பதிவு செய்துகொள்ளாவிடில், இந்நிலத்தில் விளையும்பருத்தி உகாண்டா பருத்தியாகக் கருதப்பட முடியாதாம். இவ்வருடம் பல விவசாயிகளால் பதிவு செய்துகொள்ள முடியாது போய்விட்டதால், இவ்விதிகளை தளர்த்தவேண்டுமென சர்க்காரிடம் கோரும்படி மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி பருத்தி வியாபாரிகள் சங்கத் தலைவர் அழகிரி ராஜாவும், உகாண்டா பருத்தி பயிர்செய்வோர் சங்கக் காரியதரிசியான சுப்பராஜாவும் மத்திய பருத்திக் கமிட்டியை வேண்டிக்கொண்டிருந்தனர்.

துறைமுகத் தொழிலாளர் ஸ்ட்ரைக்

எர்ணாகுளம், ஜூலை 17— கொச்சின் துறைமுக தொழிலாளர்கள் யூனியனைச் சேர்ந்த 2000 தலைச்சுமைத் தொழிலாளிகள், இன்று காலை வெலிங்டன் தீவில் திடீர்வேலைநிறுத்தம் செய்தனர். லேபர் கமிஷனர் முன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு விரோதமாக தெ. இ. கார்பரேஷன் புது தொழிலாளிகளைக் கொண்டு வந்ததை எதிர்த்து இந்த ஸ்ட்ரைக் நடந்தது. கப்பல்களில் ஸ்தம்பிப்பு ஏற்பட்டது.

செஞ்சிலுவை ஸ்தாபனத்தை நம்பமுடியாது!

டாக்டர் ஜான்ஸன் கருத்து

லண்டன், ஜூலை 16— கொரியாவில் அமெரிக்கர்கள் விஷக்கிருமிகளை உபயோகப்படுத்தினதைப் பற்றி அங்கு சென்று பரிசீலனை செய்வதற்கு 'செஞ்சிலுவை' ஸ்தாபனத்தை நம்ப முடியாது என்று காண்டர்பரி டீன் டாக்டர் ஜான்ஸன் கூறினார்.

லண்டனில் ஒரு பொதுக் கூட்டத்தில் டீன் பேசுகையில் சர்வதேச செஞ்சிலுவை ஸ்தாபனமென்பது கிடையாது. அது ஸ்விட்ஜர்லாந்து செஞ்சிலுவை ஸ்தாபனமே என்றார். இந்த ஸ்தாபனத்தை சீனர்களோ, வட கொரியர்களோ, ருஷ்யர்களோ அங்கிகரிக்கவில்லை.

(செஞ்சிலுவை ஸ்தாபனத்தை அனுப்பலாமென்று முன்னர் அமெரிக்கா யோசனை கூறியிருந்தது.)

சியாங் சீன வெளியேறுகிறது!

ஹெல்சிங்க், ஜூலை 17— கம்யூனிஸ்ட் சீனாவையும், சியாங் சீனாவையும்-இரண்டையும் ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கெடுத்துக்கொள்ள அனுமதிப்பது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு செய்ததைக்கண்டு கோபமடைந்த சியாங் சீனப் பிரதிநிதிகள் தாங்கள் ஒலிம்பிக்கில் பங்கெடுத்துக்கொள்வதில்லை என்று முடிவு செய்துவிட்டனர்.

விளையாட்டுப் பந்தயங்களில் உலகிலுள்ள எல்லா மக்களும் பங்கெடுத்துக்கொள்ள வசதி செய்யவேண்டும் என்ற அடிப்படையில்தான் இரண்டு சீனாக்களும் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் காரியதரிசி ஆட்டோமேயர் அறிவித்தார். இதற்கு சாதகமாக 33 பேர்களும், எதிர்த்து 20 பேர்களும் ஓட்டளித்தனர்.

கொடும் மழையில் சென்னை நகர அச்சுத் தொழிலாளர் கூட்டம்!

17-7-52 மாலை 6 மணிக்கு மதராஸ் பிரஸ் லேபர் யூனியன் பொதுக் கூட்டம் லிங்கச் செட்டி தெருவில் யூனியன் தலைவர் தோழர் தி. மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில் தான் அச்சுத் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாகத் திட்ட தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு சென்னை வந்திருப்பதாகவும், தமிழ் நாடெங்கும் பாக்டரிச் சட்டத்தில் தொழிலாளர்கட்கு அனுகூலமாக உள்ள பல ஷரத்துகள் அமுல் செய்யப்படாமலிருப்பதையும் அச்சக சொந்தக்காரர் வேண்டுமென்றே பாக்டரி சட்டத்தை மீறி வருவதையும், சம்பளப் பட்டுவாடா சட்டப்படி ஒழுங்காக ஒவ்வொரு மாதமும் தொழிலாளர்கட்கு சம்பளம் கொடுக்கப்படாமலிருந்துவரும் அநீதியையும், காங்கிரஸ் சர்க்காரும், லேபர் கமிஷனரும் தொழிலாளர் நலனில் கருத்தைச் செலுத்துவதே இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் சர்க்கார், சென்னை சர்க்கார் அச்சுக்கூடத்தில் அல்லது சென்னை ராஜ்ய அச்சுக்கூடங்களில் சர்க்கார் பஸ் டிக்கெட்டுகளை அச்சடிக்காமல் பிரிட்டனில் அச்சடித்திருக்கும் துரோகத்தை அம்பலப் படுத்தினார்.

தோழர் சி. வி. கே. ராவ் எம். எல். ஏ. பேசுகையில் கொள்ளைலாப மடித்துவரும் "ஆந்திர பத்திரிகா நிர்வாகம் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அளிக்க மறுத்து வருவதையும், இ[illegible]ன வாலப்பிடித்து[illegible] கமிஷனர் தொழிலாளர் எதிர்ப்புக் கொள்கையையும் வன்மையாகக் கண்டித்தார், அச்சுத் தொழிலாளர் அனைவரும் மதராஸ் பிரஸ் லேபர் யூனியனில் சேர்ந்து நல்வாழ்விற்காக ஒன்றுபட்டுப் போராடி வெற்றிபெற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

தோழர் கே. டி. ராஜு எம். எல். ஏ. பேசுகையில், ராஜாஜி மந்திரிசபையின் ஜனவிரோத பட்ஜெட்டை அம்பலப்படுத்தினார். அசெம்பிளியில் மக்கள் நலனுக்காக ஐ. ஜ. மு. யினர் பாடுபட்டு வருவதை, காங்கிரசின் சர்க்கார் ஜனவிரோத நடவடிக்கைகளை பிரதி தினமும் அம்பலப் படுத்தி வருவதையும் குறிப்பிட்டார். தொழிற்சங்கஸ்தாபனங்களை மேலும் மேலும் பலப்படுத்தி தொழிலாளர் பொது மக்களின் நலன்களுக்காக விரதிரமாக ஒன்றுபட்டு போராடி வெற்றி பெறவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

நகர அச்சுத் தொழிலாளர் நிலைமையைப் பற்றி மதராஸ் பிரஸ் லேபர் யூனியன் பொதுக் காரியதரிசி தோழர் ஏ. கோவிந்தசாமி விரிவாகப் பேசினார்.

'ஹோ அன கோ' 'லா ஜர்னல்' 'ஆர்டிஸன', பிரஸ்களிலுள்ள நிர்வாகத்தின் தொழிலாளர்களைப் பழி வாங்காமல், தொழிலாளர் நியாயமான கோரிக்கைகளை காலதாமதமின்றி அளித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று குறிப்பிட்டார்.

கூட்டம் ஆரம்ப முதல் முடியும் வரை மழையிருந்தும் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ந—கி)

மக்கள் மன்றம்

சினிமா கொட்டகை சிப்பந்திகள் படும்பாடு!

ஐயா,

சினிமா கொட்டகையில் வேலை பார்க்கும் சிப்பந்திகளின் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டே போகிறது. பரமக்குடியில் தற்சமயம் 2 தியேட்டர்கள் உள்ளன.

கவர்மெண்ட் சட்டப்படி ஆபரேட்டருக்கு ரூ. 120, உதவி ஆபரேட்டருக்கு ரூ. 75, கேட் கீப்பருக்கு ரூ. 45 என்றிருந்தும் முறையே ரூ. 70, 30, 20 வீதம்தான் கிடைத்து வருகிறது. லீவு நாட்களும் கிடைப்பதில்லை. உதவி ஷாப்பு சட்ட இன்ஸ்பெக்டரும் தியேட்டருக்கு வந்து கலர், சிகரெட் குடித்துவிட்டு, சினிமாவை சிறிது நேரம் பார்த்துவிட்டு புசுகல் கையெழுத்து போட்டுவிட்டுச் சென்று விடுகிறார். தியேட்டர் நிர்வாகியின் சொந்த வீட்டு வேலைகளையும் சிப்பந்திகள் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

—ஒரு சினிமா சிப்பந்தி.

"விவசாயிகளுக்கு விற்பனைவரி விலக்கு தேவை"

ஐயா,

விவசாயிகள் கரும்பை கரும்பாகவே எவ்வளவு ரூபாய்க்கு விற்றாலும் வரி கிடையாது. பெரிய விவசாயிகள் கரும்பாக விற்க முடியாமல் கரும்பாலை போட்டு துட்டி வெல்லமாக விற்றால் அவர் வியாபாரி ஆகி விடுவாராம். வருஷத்திற்கு ரூ. 10,000க்கு விற்றால் விற்பனை வரி கட்ட வேண்டுமாம்.

5 ஏக்கர் கரும்பு பயிரிட்டால் காங்கிரஸ் ஆட்சியில் விவசாயியும் வியாபாரி ஆகும் விந்தையைப் பார்க்க முடியும்! முதன் மந்திரி ராஜகோபாலாச்சாரி இதை கவனித்து விவசாயிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க முன் வருவாரா?

திருமங்கலம் கே. எஸ். வேல், 16-7-52

இது ஒழுங்கா?

ஐயா,

"கலைநேசன்" காரியாலத்தில் நான் 6 மாத காலமாக வேலை பார்த்து வருகிறேன், எனக்கு ரூ. 50 சம்பளமென்று பெயர். ஆனால் பிரதிமாதம் 15ம் தேதி 5 அல்லது 10 ரூபாய் கொடுத்து, 5ம் தேதியே சம்பளம் பெற்றுக் கொண்டதாக நிர்ப்பந்தப் படுத்திக் கையெழுத்து வாங்கிக் கொள்வார்.

இம்மாதம் 15ம்தேதி ஆசிரியர் சபாபதியின் தாயிடம் சென்று சம்பளம் கேட்டேன். மத்தியானம் வந்தால் ரூ. 5 தருவதாகச் சொன்னாள். ஆபீசிற்குச் சென்ற எனனை மானேஜர் வேலைக்கு லாயக் இல்லை என்று வீட்டுக்குப் போகும்படி சொல்லி விட்டார். அடுத்தநாள் சென்று எனது சர்டிபிகேட்டுகளைக் கேட்டேன். தர முடியாதென்றனர், ஆசிரியர் சபாபதி இரண்டு அறை அறைந்தார், இதற்கு நியாயம் கிடைக்காதா?

பி. விஸ்வநாதன், மயிலாப்பூர்

புதிய வரிகளுக்கு எதிர்ப்பு

நாங்குநேரி, ஜூலை 14— ஜூலை 11-ந் தேதியன்று முற்போக்கு வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ராஜாஜி சர்க்காரின் புதிய வரிகளைக் கண்டித்தும் இத் தொகுதி எம். எல். ஏ. சங்கர் இந்த வரிகளை சட்ட சபையில் எதிர்த்துப் பேசாததைக் கண்டித்தும் தோழர்கள் ஆர். வி. அனந்தகிருஷ்ணன் பீர் இஸ்மாயில் ஆகியோர் பேசினார்.

சாத்தான்குளம், ஜூலை 14— முற்போக்கு வாலிபர் கழக செயற்குழு கூட்டத்தில், மாகாண, மத்திய சர்க்கார்கள் தங்கள், தங்கள் வரவு செலவு திட்ட விபரங்களையும், சம்பந்தப்பட்ட சட்ட சபை விவாத விளக்கங்களையும் தனித்தனி பிரதேச மொழிகளில் பிரசுரமாக்கி பொது ஸ்தாபனங்களுக்கு இலவசமாய் விநியோகிக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமரையும், சென்னைப் பிரதமரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது.

பெருந் தீவிபத்து

சிங்கம்புணரி, ஜூலை 16— சிங்கம்புணரியில் ஜூலை 14ந் தேதியன்று பகல் 3 மணிக்கு தெற்குத் தெருவில் தீப்பிடித்து சுமார் 60 வீடுகள் வரைக்கும் எரிந்துவிட்டன. வைககோல் போர் 15 வரைக்கும் தீயில் நாசமடைந்தது. 40 வயதுள்ள ஒரு தாய் தீயில் சிக்கி மாண்டாள்.

சுமார் ரூ. 25,000 பொருள் நஷ்டமும் ஏற்பட்டிருக்குமென்று தெரிகிறது.

வீடிழந்த மக்கள் தவியாய் தவிக்கின்றனர். தீ விபத்திற்கு இன்னும் காரணம் தெரியவில்லை.

அம் மக்களுக்கு சர்க்கார் நிவாரண உதவி அளிக்க முன் வரவேண்டுமென்று. சிங்கம்புணரி கம்யூனிஸ்ட் கட்சி யூனிட் கேட்டுக் கொள்கிறது. (ந-கி.)

முத்தமிழ்ப் போட்டி

முத்தமிழ் கலை மன்றத்தார், 3-8-52-ல் பேச்சுப்போட்டி (எல்லாம் மக்களும்). இசைப்போட்டி (தமிழிசைப் பாடல்கள்), நாடகப்போட்டி (ஓரங்க நாடகம்) நடத்த முடிவு செய்துள்ளனர். போட்டியில் கலந்து கொள்பவர்கள் 26-7-52-க்குள் 8 அணா பிரவேசக் கட்டணத்துடன், 22 கல்யாணமண்டபம் ரோடு, இராயபுரம், சென்னை-13-க்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

ஒலிம்பிக் பந்தயங்கள்

ஹாக்கி விளையாட்டில் இந்திய கோஷ்டி ஜெயித்தது

ஹெல்சிங்கி, ஜூலை 17— இன்று நடைபெற்ற செமி-பைனல்ஸ்' ஹாக்கி விளையாட்டுப் பந்தயத்தில் இந்திய கோஷ்டி 4 கோல்கள் போட்டு ஜெயித்தது. ஆஸ்டிரிய கோஷ்டி ஒரு கோலும் போடாமல் தோற்றது.

மழை தூறிக்கொண்டிருந்த போதிலும கூட இந்திய கோஷ்டியின் ஆட்டம் பிரமாதமாக இருந்தது.

வேறு இரண்டு ஆட்டங்களில் பிரிட்டனும, ஜெர்மனியும் முறையே ஒரு கோலும், 7 கோல்களும் போட்டு ஜெயித்தன.

பெல்ஜியம் ஒரு கோலும் போடாமலும், போலந்து இரண்டு கோல்கள் போட்டும் தோற்றது.

ஒலிம்பிக் பந்தயங்கள் முடிந்த பின்னர் இஸ்ரேலுக்கு வருமாறு இந்திய ஹாக்கி கோஷ்டி அழைக்கப்பட்டுள்ளது.

மார்க்கெட் நிலவரம்

ஜூலை 17

பம்பாய்:
பவுன் ரூ. 62/10
வெள்ளி ரூ. 162/—162/6.
,, பழசு ரூ. 90/2—89/10.

கல்கத்தா:
பவுன் ரூ. 63/12
வெள்ளி-ரெடி 162/2 162/5
பழசு ரூ. 91/- 90/10
ஆமணக்கு செப்டம்பர் ரூ. 162/12 163/-
சக்கரை-ரெடி ரூ. 94/95; ஆவாரி ரூ. 93/-
வேர்க்கடலை ரூ. 32/8
யாளி விதை-ரெடி ரூ. 30/4
யாளி எண்ணை-ரெடி ரூ. 17/4
ஆமணக்கு—ரெடி ரூ. 32/8
வேர்க்கடலை—ரெடி ரூ. 16/9.
நூல்—ஜூலை 859/861.
மிளகு—ரெடி 465; ஆகஸ்ட் 3080, செப்டம்பர் 2950,
தே. எண்ணெய்—ரெடி 22/6, ஜூலை 22/3, ஆகஸ்ட் 22/3 செப்டம்பர் 21/12;
பாதரசம்—ரெடி 396, ஆவணி ரூ. 400/3.

விருதுநகர் மார்க்கெட் நிலவரம்

க. எண்ணை
ரோட்டரி ரூ. 18-6-0
க. எண்ணை 10 படி
டின் இல்லாமல் ரூ. 18-8-0
ந. எண்ணை
(டின் உட்பட) ரூ. 38-8-0
ந. எண்ணை
(டின் இல்லாமல் ரூ. 29-8-0
தே. எண்ணை
(டின் உட்பட ரூ. 28/12/0, 28/4/0
க. புண்ணாக்கு
பொதி 1க்கு ரூ. 25-0-0
ரோட்டரி ரூ. 23-0-0
எ. புண்ணாக்கு ரூ. 40-0-0
நயம்
மிளகாய் வத்தல்
246 ராத்தல் பொதி 1-க்கு ரூ. 138, 140
2-ந்தரம் ரூ. 130. 123 ,,
1-ந்தரம் 96 படி
கொண்ட கோட்டை
1-க்கு நயம் ரூ. 53
2-ம் தரம் ரூ. 50
1-ம் தரம் கி. கடலை பருப்பு
531 ராத்தல் பாரம் ரூ. 147
வெள்ளைநாடு ரூ. 140
2-ந்தரம் உளுந்து படி
1-க்கு ரூ. 1-0-0, 1-0-6
பருசு மார்க்கெட்
கருங்கண்ணி 784 ராத்தல் கொட்டைமுத்து
ரூ. 1-15-0
பருத்திவிதை
252 ராத்தல் பொதி
1க்கு டின்னி ரூ. 21-12-0
நயம் ரூ. 22-12-0
நி. கடலை ரூ. 1க்கு 4½ படி

இங்கும்-அங்கும்

உலகத்துக்கொரு புதுமை

கிளாட்ராய் ஒரு பிரெஞ்சுக் கவி, எழுத்தாளர். அவர் கொரிய நாட்டிற்குச் சென்று திரும்பியவர். பிரெஞ்சு நகரங்களை ஹிட்லர் விமானங்கள் தரை மட்டமாக்கியதைக் கண்ணாரக் கண்டவர்; வார்சா நகரை நாஜிப் படைகள் பொடியாக்கியதைப் பார்த்தவர். ஆனால் கொரியாவை அமெரிக்கப் பேய்கள் மயானக் காடாக்கியுள்ளதைக் கண்ட பிறகு, மற்றவைகளெல்லாம் அற்பமென்று கூறுகிறார். மேலும் அவர் கூறுவதைக் கேளுங்கள்:

ஆனால் கொரிய மக்கள், சுட்டுத் தள்ளப்பட்டு, விஷப் புகையில் அடைக்கப்பட்டு; பட்டினி போடப்பட்டு, அழித்தொழிக்கப்பட்ட பிறகும், வெற்றி வீரர்களாய்த் திகழ்கின்றனர். கொரிய மண்ணை விட்டு திரும்புமுன், ஒரு கொரியத் தோழனை பிரஞ்சுக் கவி கட்டித் தழுவி விடைபெற்றுக் கொண்டார். ஆஹா! உலகத்துக்கொரு புதுமையாக விளங்கும் கொரிய மக்களின் போராற்றல். அசைக்கமுடியாத வீரம், மக்கள் சக்தியில் சலியாத இறுதி, தேசத்தின் மீது பெருமை, மனித உயர்வைக் கட்டித் தழுவுவதாகத் தோன்றிற்றாம் அந்தக் கவிஞருக்கு!

இந்தச் சின்னஞ் சிறு நாட்டினர் பெருமை பெறும் வீர மக்கள்! அவர்கள் ரத்தம் ஓடுகிறது; துயரம் பெருகுகிறது; உயிர் விடுகிறார்கள்; ஆனால் அவர்கள் எதிரிக்குப் பணியவில்லை. பூமிக்கடியிலே சுரங்கங்களிலே தொழிற்சாலை, ஆஸ்பத்திரி, பள்ளி, ஆராய்ச்சிகள் நடத்துகிறார்கள். பூமிக்கு மேல் தளத்தில் சகலரும் தங்கள் தேசபக்திக் கடமையிலே மூழ்கி நிற்கிறார்கள். ஜனநாயகக் குடியரசை நிர்மாணித்துள்ள கொரிய மக்களும், மாபெரும் சீனத் தொண்டர்களும் உறுதியுடன் போராடுவதைக் கண்டு மெய்சிலிர்த்தோம் என்றார் பிரெஞ்சுக் கவிஞர்.

ஒருநாள் போங்யாங் அருகிலுள்ள காட்டின் நடுவே. கல்லூரியில் படித்த ஒரு சீனத் தொண்டர், ஒரு ஹங்கேரிய டாக்டர், ஒரு சோவியத் பத்திரிகை ஆசிரியர், ஒரு போலந்து சர்ஜன், ஒரு சீன கிருமி ஆராய்ச்சிக்காரர் ஒரு ருமேனிய ராஜ தந்திரி பிரெஞ்சு எழுத்தாளராகிய கிளாட்ராயும் சந்திக்க நேரிட்டது. யுத்தத்தின் பயங்கர விளைவுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களாம் சிறிது நேரம். ஒருவர் மெதுவாக சர்வதேச கீதத்தைப் பாடத் துவங்கினார். அவ்வளவுதான் எல்லோரும் பாடத்தொடங்கி விட்டார்கள். கொரிய மொழி, சீன மொழி, ஹங்கேரிய மொழி, ருஷ்ய மொழி, ருமேனிய மொழி, போலந்து மொழி பிரெஞ்சு மொழிகளில் சேர்ந்து பாடத் தொடங்கினார்கள். வார்த்தைகள் வெவ்வேறு, ஆனால் பண்ணும், கருத்தும் ஒன்றாய் ஒலித்தது!

கொரியத் தோழன் ஆலிங்கனமும், குண்டு வீச்சுக்கிடையே கொரிய மண்ணில் சர்வதேசகீதம் ஒலித்ததையும் என்றும் மறக்க முடியாதென் கிறார் அந்தப் பிரஞ்சுக்கவிஞர்.

அத்தகைய கொரிய வீரத் திருநாட்டு மக்களுக்கு இந்திய சர்க்கார் உதவுவதல்லவா, இந்தியாவின் பரம்பரைக்குப் பெருமையளிக்கும்! ஆனால் அங்கு கிருமிக் குண்டெறியும் அமெரிக்கப் படைகளுக்கு உதவியாகவல்லவா நேரு சர்க்கார் வைத்தியப் படை அனுப்பியுள்ளது!

பெண்:—கவர்னருக்கு ஆயிரக்கணக்கில் செலவும், ஆடம்பரமும் எதற்கு என்று எதிர்க் கட்சி மெம்பர்கள் கேட்டால், அதற்கு கவர்னர் மாளிகை ஒரு சத்திரம், ஒரு பெரிய ஹோட்டல்போன்றது என்று ராஜாஜி சொல்லலாமா? சத்திரத்தில் யாருக்கு சாப்பாடு கிடைக்கும், ஹோட்டலில் யார் சாப்பிடமுடியும் என்பது நமக்குத் தெரியாதா?

ஆண்:—இது அரசியல் சட்ட சம்பந்தப்பட்டது என்று ராஜாஜிதான் சொல்லிவிட்டாரே; அதோடு நிறுத்து!

சூப்ரண்டு ஆபீஸ் முன் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

கோலார் தங்கவயல் ஜூலை 16—

மைசூர் மைன்ஸ் தொழிலாளிகள் நேற்று கம்பெனி சூப்ரண்டு ஆபீஸ் முன்பு கூடி ஆர்பாட்டம் செய்தனர். தொழிற் சங்க பிரதிநிதியை அவமதித்தது பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று கோரினர். போலீசார் தொழிற் சங்கத் தலைவர் தோழர் வி. எம். கோவிந்தன உட்பட நால்வரைக் கைது செய்தனர்.

14-7-52-ல் கன்ட்ராக்ட மண் தொழிலாளிகள் வேலைக்கேற்ற போனஸ் கோரி எட்கர் ஷிப்டில் ஆர்பாட்டம் செய்தனர். நிர்வாகம் அவர்களுடைய கோரிக்கையை கவனிக்காததுடன் சங்கப் பிரதிநிதியை ஷப்டி உள்ளே விட மறுத்தனர்.

ஆத்திரங் கொண்ட தொழிலாளிகள் சங்கப் பிரதிநிதியை வாசலைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றனர். அதற்காக ஆங்கிலோ இந்திய டைம்கீப்பர் கண்டபடி திட்டியிருக்கிறார். மேலும் தொழிலாளிகளை வேலைக்கு இறக்கவும் மறுத்து விட்டார்.

இதனால் நேற்று எல்லாத் தொழிலாளர்களும் ஒன்றாகக் கூடி எட்கர்-ஷாப்டில் ஆர்ப்பாட்டம் செய்து சங்கப் பிரதிநிதிகளை உள்ளே அனுமதிக்க வேண்டும். தொழிலாளர் வேலைக்கு ஏற்ற போனஸ் வேண்டும் என்று கோரினர் சங்க செயலாளர் தோழர் பி. ஆர். கம்பீரம் சமரசம் செய்யச் சென்றார். அவரை நிர்வாகம் உள்ளே அனுமதிக்க மறுத்து விடவே, தொழிலாளர்கள் கண்டன வேலை நிறுத்தம் செய்தனர்.

பின்னர் ஊர்வலமாகச் சென்று மைனிங் இன்ஸ்பெக்டரைக் கண்டனர்.

பின்னர் மத்தியானம் 2 மணிக்கு சூப்ரண்டு ஆபீஸ் முன்பு தொழிலாளிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். சூப்ரண்டு வெளியே வந்து சங்கத் தலைவரிடம் பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென்று கோரினார்கள். ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

வெள்ளை முதலாளிக்கு அனுசரணையாக மைசூர் காங்கிரஸ் போலீசார் தோழர்கள் வி. எம். கோவிந்தன், பி. ஆர். கம்பீரம்' கே. எஸ். மேஷாக், எம். ரத்தினத்தைக் கைது செய்து பின்னர் ஜாமீனில் விட்டனர்.

அன்றைய தினமே மாலை 6 மணிக்கு போலீசின் நடவடிக்கையையும் மானேஜ்மெண்டின் போக்கையும் கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினர்.

முனிசிபல் தொழிலாளர் வெற்றி

விருதுநகர், ஜூலை 14—

15-6-52-ல் நடைபெற்ற கூட்டத்தில் நகர சுத்தித் தொழிலாளிகளில் இருவர் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 49 கொடுக்க வேண்டும். வீட்டுப்படி ரூ. 5 கொடுக்க வேண்டும் என்று பேசியதற்காக நகர சுகாதார அதிகாரி அவ்விருவரையும் வேலையை விட்டு நீக்கி விட்டார். மற்றத் தொழிலாளிகள் இது சம்பந்தமாக அவரிடம் காரணம் கேட்டதற்கு மிகவும் அடாத பதிலைச் சொன்னாராம்!

அதைத் தொடர்ந்து சுமார் 186 தொழிலாளிகளும் மத்தியானம் $2\frac{3}{4}$ வரைக்கும் வேலை நிறுத்தம் செய்தனர். நீக்கப்பட்ட இருவரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரினர்.

முனிசிபல் கமிஷனர் தொழிலாளர்களை பயமுறுத்திப் பார்த்தும் பயன்படாமற் போகவே நீக்கப்பட்ட இரு தொழிலாளிகளையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள இசைந்தார். மாலை $3\frac{1}{2}$ மணிக்கு நீக்கப்பட்டவர்களுடன் சகலரும் வேலைக்குச் சென்றனர்.

சுருட்டுக் கம்பெனியில் கதவடைப்பு!

திருச்சி, ஜூலை, 15—

திருச்சி பாண்டுரங்கன் மார்க் சுருட்டு கம்பெனி முதலாளி தொழிலாளிகளுடன் லேபர் ஆபீசர் முன்னிலையில் 4-7-52-ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கைவிட்டு மீண்டும் இன்று முதல் தொழிற்சாலையை கதவடைப்பு செய்து விட்டார்.

முன்பு ஒரு தொழிலாளிக்கு 1000-1250 சுருட்டுகள் செய்ய வேலை கொடுத்தவர் இம்மாதம் 8, 9, 10 தேதிகளில் 750 சுருட்டுகளாக குறைத்தார். 14ம் தேதி 500 சுருட்டுக்கு வேலை கொடுத்தார். இன்று முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி கதவடைப்பு செய்து விட்டார்.

மார்ச் மாதம் முதல் கணக்கிட்டு பஞ்சப்படியும், பாக்டரி சட்டப்படி சம்பளத்துடன் லீவு தரும்படி பாக்டரி இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டதைப் பற்றி தொழிலாளிகள் கேட்டதற்கு அவர்களை முதலாளி சாக்கடை பாஷையில் திட்டினாராம்!

முதலாளி திருச்சியிலிருக்கும் சுருட்டுக் கிடங்கை நிரந்தரமாக மூடிவிடவும், தகப்பனார் பெயரில் துறையூரிலுள்ள சுருட்டுக் கிடங்கை மட்டும் நடத்த முயற்சிப்பதாகவுகு லைசென்சை வேறொருவருக்கும் மாற்ற முயற்சிப்பதாகவும் தெரிகிறது.

கர்னாடக மாகாணம் அமைக்க ஒன்றுபடுவோம்!

பங்களூர், ஜூலை 12—

கம்யூனிஸ்ட் கட்சியின் கர்னாடக கமிட்டி காரியதரிசி என். எல். உபத்யாயா கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:—

"மைசூர் சட்டசபை அங்கத்தினர்கள் பலர், உடனடியாக மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்படுவதற்கு எதிராக பேசியிருப்பது துரதிருஷ்டமாகும். இது கம்யூனிஸ்ட் கட்சியுடைய கருத்தையோ, அல்லது ஜனநாயக மனோபாவம் கொண்ட மக்களின் கருத்தையோ பிரதிபலிக்கவில்லை.

உடனடியாக மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும், செயற்கையாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் ஏற்படுத்தப்பட்ட பன்மொழி மாகாணங்களையும் ராஜ்யங்களையும் பல்வேறு தேசிய இனங்களின அடிப்படையில் பிரித்துவிட வேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது.

நம் கட்சியின் அடிப்படைக் கொள்கை இது. இதை அடைய நாம் உறுதி பூண்டுள்ளோம். வெகுகாலமாக இவ்வாறு ஒன்று சேருவதை விரும்பிவந்த நம் நாட்டின் பல்வேறு இனங்களின் பூர்ண சமூக, பொருளாதார, கலாசார முன்னேற்றத்திற்கு இது அத்யாவசியமாகும்.

இந்தத் துறையில், கர்னாடக மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களாவார்கள். "ஏ" "பி" "சி" ராஜ்யங்களில் பல்வேறு நிர்வாக ஏரியாக்களிலும் ராஜ்யங்களிலும் சிதறிக்கிடக்கும் இவர்கள் நீண்டகால அலட்சியத்தினாலும், அடக்குமுறையினாலும் துன்புற்று வந்திருக்கிறார்கள். தங்களுடைய சொந்த தேசிய ராஜ்ய ஜனநாயக அடிப்படையில், இந்திய யூனியனில் அமைக்கப்படுவதை ஆவலுடன் விரும்பி எதிர்பார்க்கிறார்கள்.

நமது தேசிய இயக்கத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை இது. மைசூர் ராஜ்யத்தில் உள்ள சில மக்கள் பகுதியினரிடையே இதுபற்றி தவறான கருத்துக்கள் இருப்பதையும், அவை நீக்கப்பட வேண்டும் என்பதையும் நான் உணருகிறேன். ஒருவருக்கொருவர் விவாதிப்பதின் மூலம் அவர்களுக்குத் தெளிவேற்படுமென நான் நம்புகிறேன். ஆகவே, எல்லா மக்கள் பகுதியினரின் இந்த அடிப்படைக் கோரிக்கையை அடைய, ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு பொதுவான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக எல்லாக் கட்சிகளும், குழுக்களும் உடனடியாக ஒன்று கூட வேண்டியது அவசியமாகும்.

வீட்டை கொளுத்தினர் காங்கிரஸ்காரர்

பரமக்குடி, ஜூலை 15—

நேற்று இங்கு ஜுடிஷியல் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பார்த்திபனூரிலிருக்கும் சிக்கந்தர் ராவுத்தர் மகன் பள்ளிவாசல் டிரஸ்ட்டி, இபுராம்கனி என்பவர் புகார் ஒன்றை தாக்கல் செய்தார்.

புகாரில் எதிரிகளாக, பார்த்திபனூரிலிருக்கும், ஆ. தங்கச்சாமி பிள்ளை (தில்லை நடராஜர் பஸ் முதலாளியும் இராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மெம்பருமாவர்) உள்பட 19 பேர்கள் உள்ளனர்.

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் எம். எல். ஏ., மொட்டையக்குடும்பர் எம்.எல். ஏ., இராமநாதபுரம் நவசக்தி ஆசிரியர் ஆகியோர் உள்பட 15 பேர்கள் வாதிதரப்பு சாட்சிகள்.

முதல் எதிரியும், பார்த்திபனூர் ஹெட்மனும் நீடித்த விரோதத்தினால் கிரிமினல் வழக்குகள் வாதியை சம்பந்தப்படுத்திபும், அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் ஆத்திரமடைந்தும் இப்பொழுது கோர்ட்டில் தாக்கலாகியிருக்கும் ஆர். சி. 7/52 கேசில் சம்பந்தப்படுத்தினார்கள். மே 19ல் வாதி கைதி செய்யப்பட்டு ரிமாண்டில் இருக்கும் பொழுது, முதல் எதிரியும் அவரது ஆட்களும் ஆயுதபாணிகளாய் பகலில் வந்து, போலீஸ் ஸ்டேஷன் உள்ள அந்த ஊரில் வீட்டிலுள்ள பாத்திர பண்டங்கள், பெட்டியி விருந்த ரூ. 50, சாமான்களையும் கைப்பற்றிக் கொண்டு, பெண்டு பிள்ளைகளைத் துரத்திவிட்டு, வீட்டைக் கொளுத்திவிட்டார்கள் என்று தகவல் கிடைத்து, போலீஸ் அதிகாரிக்கு மனுச் செய்தும் பலனில்லை என்றும் புகாரில் கூறியுள்ளார்.

அதனால்தான் இந்தப் புகாரை கோர்ட்டில் இவர் தாக்கல் செய்துள்ளார்.—ந.நி.

மத்திய பிரதேசத்தில் மாங்கனீஸ் நிலக்கரி உற்பத்தி

நாகபுரி, ஜூலை 16—

மத்யபிரதேசத்தில், 1950ல் 176 மாங்கனீஸ் சுரங்கங்கள் உள்ளன என்றும் 1949-ல் 5,38 220 டன்னும், 1950-ல் 6,06,339 டன்னும் எடுக்கப்பட்டன என்றும் இன்று மத்ய பிரதேச சட்ட சபையில், தொழில் மந்திரி மேதா அறிவித்தார்.

1947ல் 14,90,000 டன் உற்பத்தியான நிலக்கரி 1950-1951ல் 32 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது என்று மற்றொரு கேள்விக்கு பதில் கூறியுள்ளார்.

சின்ட்வாரா, சந்தா, யோட்மால், பிலாஸ்பூர் முதலிய ஜில்லாக்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன என்றும் ஜபல்பூர் நாகபுரி ஜில்லாக்களில் நிலக்கரி உள்ளதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றும் கூறினார்.

தின்பண்டங்களின் விலையை குறைக்கவும்!

திருச்சி, ஜூலை 15—

திருச்சி தி. மு. க. செயலாளரான தோழர் எம். எஸ். மணி, தோழர் கல்யாண சுந்தரம், எம்.எல்.ஏவுக்கு ஒரு யாதாஸ்து அனுப்பியுள்ளார். அதில் "நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாலும், மக்களிடம் வாங்கும்சக்தி குறைந்து விட்டதாலும் காபி, சிற்றுண்டி நிலையங்களில் பண்டங்களின் விலையை குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்று கோரியுள்ளார்.

அவர் இது விஷயமாக, ஓட்டல் முதலாளிகள் சங்கத்திற்கும், சர்க்காருக்கும் தெரிவித்துள்ளார்.

கூனூர் மத்ய சர்க்கார் சிப்பந்திகள் கூட்டம்

கூனூர், ஜூலை 16—

22-6-52ல் கூனூர் ரெயில்வே ஸ்டேஷன் பின்புறத்திலுள்ள கிருஷ்ணா ஓட்டலில் தெ. இ. ர. தொ. ச. கூனூர் கிளை, வெடிமருந்து தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், என். ஜி. ஓக்கள் சங்கம், ஆபர் வைசர் சங்கம், குமாஸ்தா சிப்பந்திகள் சங்கம், டெக்னிகல் டெவலப்மெண்ட் எஸ்டேபிளிஷ்மெண்ட், கல்வி, சரித்திர இலாகா, அ. இ. தபால் கீழ்த்தர சிப்பந்திகள் கூனூர் [illegible] இலாகா வருமான வரி இலாகா ஆபீஸ், கலால் இலாகா சிப்பந்திகளின் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு தெ. இ. ர. தொ. ச. கிளை செயலாளர் தோழர் டி. ஆர். சைமன் தலைமை வகித்தார். தோழர்கள் தாஸ், நடராஜன் இருவரும் பேசினர்.

சகல மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஒரே ரீதியில் வித்தியாசமில்லாமல் மலை வாசபடி கொடுக்கப்பட வேண்டுமென்று கூறினர். தேனீர் விருந்துக்குப் பிறகு கூட்டம் கலைந்தது.

வானொலி

ஜூலை, 20 ஞாயிறு

சென்னை—41.32 மீ.

காலை
7-00 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 கதம்பம்
8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்
1-00 எஸ். சங்கரன் குரலிசை
1-30 கீத மஞ்சரி
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 கதம்பம்
2-00 தமிழில் செய்தி
2-30 செண்டு இசை நிகழ்ச்சி
3-00 டி. கே. ராதாகிருஷ்ணன்—புல்லாங்குழல்
4-00 நிஸ்வார்த சேவனம் (மலையாள நாடகம்)
4-05 ஜஸ்ட் எமினிட் (கன்னட நாடகம்)
4-30 ஐரோப்பிய சங்கீதம்

மாலை
5-30 பாலையூர் கனக சபாபதி ஐயர்—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-10 அறிவிப்புகள்
6-15 எஸ். ராஜம் —பாட்டு
6-45 வி. என். சர்மா ராவ் —பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-30 கதம்பம்
7-45 ஜி. என். ராஜகோகிலம் —பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 எல். துரைஸ்வாமி ரெட்டி—பாட்டு
9-45 ஐரோப்பிய சங்கீதம்

திருச்சி

காலை
7-10 ஸ்தோரம்பம்
7-15 தமிழில் செய்திகள்
7-30 இசைச் சுவடி
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 சித்ரகானம்

பகல்
12-00 கதம்ப விநோதம்
12-30 சூர்யகாந்தி-கதம்ப நிகழ்ச்சி
1-00 மணிமலர்
1-30 நாகஸ்வரம்
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 குரலிசை
2-00 தமிழில் செய்தி
2-10 பெண்ணுலகம்
2-30 செண்டு இசைநிகழ்ச்சி

மாலை
5-30 கோவிந்த அய்யங்கார் —வீணை
5-45 ஆர். கணேசன்-பாட்டு
6-05 அறிவிப்புகள்
6-10 நீங்கள் கேட்டவை
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 சித்ரகானம்
7-45 திரைப்பட விமர்சனம்
8-00 நாகம்மா, கமலா —பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 கோவிந்த அய்யங்கார் —வீணை

சேலம் செய்திகள்

சேலம் அரசியல் கைதிகள் கோரிக்கை

சேலம், ஜூலை 16—

ஜெயில் மந்திரி குட்டி கிருஷ்ண மேனன், சேலம் சிறையிலுள்ள தோழர்களின் சார்பாக 7 பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினார். 16 கோரிக்கைகள் கொண்ட ஒரு மகஜரை அவர்கள் சமர்ப்பித்தனர்.

சேலம் துப்பாக்கிப் பிரயோக விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும், அரசியல் கைதிகளாக நடத்தப்பட வேண்டும், உணவு, உடை, புத்தகம், விளையாட்டு ஆகிய வசதிகள் அதிகப்படுத்தப்பட வேண்டும், சூப்பிரெண்ட் ரகுநாதன் அத்துமீறிய நடத்தையை விசாரணை செய்தல் ஆகியவை பற்றி பத்திரிகையிடம் விளக்கிக் கூறப்பட்டது.

சேலம் பிரமுகர்கள் மறுப்பு

சேலம், ஜூலை, 15—

சேலம் நகரில் காங்கிரஸ்காரர்கள் பார்லிமெண்டில் காங்கிரஸ் எம்.பி, ஸ்ரீ எஸ். வி. ராமசாமி, ஏ. கே. கோபாலன பற்றியும் கம்யூனிஸ்ட் கட்சி பற்றியும் செய்த அவதூறு பிரசாரத்திற்கு ஆதரவாக கையெழுத்துக்கள் வாங்க முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர் என தெரிகிறது. ஆனால் நகரசபை கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முயற்சியால் சேலம் நகரத்திற்கு தோழர் ஏ. கே. கோபாலனை வரவில்லை என்ற மகஜரில் நகர பிரமுகர்கள் பலர் கையெழுத்திட்டுள்ளனர். அதில் கீழ்க்கண்ட சில பிரமுகர்கள், டாக்டர் கே. ஆர். கோபால் திராவிட கழகம், ஸ்ரீ டி. வி. பரமசிவம் பிள்ளை, துரைசாமி பிள்ளை (பார்லிமெண்ட் சீட்டிற்கு போட்டியிட்டவர்), மதுரை பிள்ளை (ஸ்வர்ணம்பிகை பஸ் முதலாளி) தங்கவேல் (பார்வார்டு ப்ளாக் மார்க்ஸிஸ்டு குரூப்) முதலியவர்களும் மற்றும் பலரும் கையெழுத்திட்டுள்ளனர். இதன் பிரதிகள் மத்ய சட்டசபை சபாநாயகருக்கும், சென்னை ராஜ்ய முதலமைச்சர் ஆச்சாரியாருக்கும் தோழர் ஏ. கே. கோபாலனுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

★

சேந்தமங்கலம் பஞ்சாயத்துபோர்டு கவனிக்குமா?

சேலம், ஜூலை 15—

சேந்தமங்கலம் பஞ்சாயத்து போர்டு பஸ் ஸ்டாண்டில் கக்கூஸ் வசதியே கிடையாது. காலை 7 மணி முதல் மாலை வரை பஸ்ஸிற்காக ஆண்களும் பெண்களுமாக காத்திருக்கும் இந்த பஸ்ஸ்டாண்டில் எவ்விதமான கக்கூஸ் வசதியும் இல்லாததால் மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர். இது விஷயத்தில் சேந்தமங்கலம் பஞ்சாயத்து போர்டார் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களேயாயின் காத்துக் கிடக்கும் பிரயாணிகளுக்கு செய்யும் மிகப் பெரிய உதவியாகும்.

★

மதுவிலக்கு குற்றங்கள்

சேலம், ஜூலை 15—

ஜூன் மாதத்தில் சாராயம் காய்ச்சியது, வைத்திருந்தது, குடித்தது ஆகிய 572 வழக்குகள் 572, சேலம் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதிவாகியுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சி நிதிக்கு மதுரையில் நாடகம்

கம்யூனிஸ்ட் கட்சியின் நிதிக்காக, ப. ஜீவானந்தம் எம்.எல்.ஏ., தலைமையில் மதுரை முற்போக்கு ஐக்கிய கலா மன்றத்தாரின்

"உரிமையின் குரல்"

என்னும் நாடகம் மதுரை சுந்தரம் தியேட்டரில், 20-7-52 ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெறும்.

(இரண்டு ஆட்டங்கள் உண்டு)

கட்டணம் ரூ. 1-0-0, 0-8-0. பெண்களுக்கு 0-6-0.

கேள்விமுறை இல்லையா?

கோவை, ஜூலை. 15—

பாப்பநாயக்கன் பாளையத்திலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட ஓலைக்குடிசைகளில் மில் தொழிலாளிகள், கூலி விவசாயிகள் வாழ்ந்துவருகின்றனர். இதில் சென்டு ஒன்றுக்கு நிலவாடகை ரூ. 4-8-0 கொடுத்து, 75 முதல் ரூ. 100 வரை செலவில் குடிசைகளை பாத்திர பாண்டங்களை விற்று வாழ்ந்துவருகிறார்கள் அந்த ஏழை மக்கள். முனிசிபல் வரியும் இவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது.

நிலவாடகை அதிகம் வேண்டுமென்று சொந்தக்காரர்கள் கேட்பது சரியல்ல வென்று சமரசம் நடக்கும் சமயத்தில், ஜூலை 10-ம் தேதி இரவு கோவிந்தசாமி என்னும் நிலச் சொந்தக்காரர் அதிக நில வாடகை கொடுக்க வேண்டுமென்று கோரி சகல பாக்கிகளையும் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்தித்தார். அதற்குத் தங்கள் கஷ்டங்களை எடுத்து முறையிட்ட பொன்னுசாமியின் தம்பி வெங்கிடசாமியை நாராயணசாமி என்ற ஒரு நடுவீதி ஆசாமி கன்னத்தில் அறைந்தார்; அதன்பிறகு அந்த சகோதரர்கள் இருவரையும் அடித்து போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டனர். பொன்னுசாமி அன்றே வெளியில் விடப்பட்டார். மறுநாள் வெங்கடசாமி ஜாமீனில் வெளிவந்தார், கேஸ் நடக்கிறது.

ஆச்சாரியார் போலீஸ் இப்படி நிலச் சொந்தக்காரர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, விசாரணையில்லாமல் அடிப்பது, கைது செய்வதற்கு கேள்விமுறை இடையாதா? (ந.நி.)

நிர்வாகஸ்தர் தேர்தல்

கோவை, ஜூலை 12—

நேற்று இரவு கோவை பீடித் தொழிலாளர் சங்கத்தின் கூட்டமொன்று ஜனப். எஸ். காசிம் தலைமையில் நடைபெற்றது.

கூலி நிர்ணயம், வருடாந்திர போனஸ், இவை பற்றி பலர் பேசினர்.

பின்னர் தோழர் எஸ். காசிம் தலைவராகவும், ஈ. எம். ஹனிபா செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஹைஸ்கூலில் ஆசிரியர்கள் இல்லை 400 மாணவர்கள் பரிதவிப்பு

பரமக்குடி, ஜூலை 15—

பரமக்குடியில் உள்ள உயர்தரப்பள்ளி ஏற்கனவே ஜில்லா போர்டாரால் நிர்வகித்து வரப்பட்டு, பிறகு, 9-6-52 முதல் சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளியில், ஹைஸ்கூல் வகுப்புகளால் 4, 5, 6, வது பாரங்களுக்கு இன்னும் ஆசிரியர்களே இல்லை. பள்ளிக்கூடம் திறந்து 1-மாதத்திற்கு மேலாகியும் பாடங்கள் நடக்காமல் 400 மாணவர்கள் பாதிக்கப்படுவதாயும், பரீட்சை எழுதுவதிலும் மாணவர்கள் 1 மாதமாக படிக்காததால் பெரும் கஷ்டத்திற்குள்ளாவர்கள் என்றும் சம்பளம் மட்டும் கொட்டி அழவேண்டியிருக்கிறது எனவும், இதற்கெல்லாம் ஆச்சாரியார் ஆட்சிதான் நிச்சயம் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேணுமென்றும், இனியாவது தாமதப்படுத்தாமல், உடனடியாக ஆசிரியர்களை நியமித்து, பள்ளியை சர்க்கார் திறம்பட நடத்தவேண்டுமென்றும் நகர் கம்யூனிஸ்ட் கமிட்டி எடுத்துக்காட்டியுள்ளது. (ந. நி.)

பழிவாங்குதலுக்கு எதிர்ப்பு

பழனி, ஜூலை 15—

நகரம் பெரிதாகி விட்டதால் நகரசுத்தி தொழிலாளிகளை அதிகப்படுத்த வேண்டும். கக்கூஸ், சாக்கடைகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கூறியதற்காக 4 தொழிலாளிகளை நிர்வாகம் வேலையை விட்டு நீக்கியுள்ளது.

நீக்கப்பட்டவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், வாரிசுப்படி வேலை கொடுக்க வேண்டுமென்றும் ஒரே இடத்தில் மஸ்டர் ரோலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், சுகாதார இன்ஸ்பெக்டர் அனாவசியமாக திட்டுவதை நிறுத்த வேண்டுமென்றும் தொழிலாளிகள் கிளர்ச்சி செய்கின்றனர்.

லஞ்ச ஊழல்களுக்கு கண்டனம்

பொதுக்குடி, ஜூலை 14—

13-7-52ல் ஷண்முகசுந்தரம் தலைமையில் கம்யூனிஸ்ட்கட்சி ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் எம். எஸ். பாண்டியன் (சோஷலிஸ்டு) பேசுகையில் சர்க்காரின் ஜனவிரோத போக்கைத் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு ஜனநாயக ஸ்தாபனங்களை பலப்படுத்த வேண்டுமென்றார். தோழர் ஆ. வி. அனந்தகிருஷ்ணன், புதிய வரி விதிப்பு, கண்ட்ரோல் நீக்கம் ஆகியவற்றினால் மக்களுக்கேற்படும் கஷ்ட நஷ்டங்களை விளக்கிக் கூறினார். லஞ்ச ஊழல்கள் அதிகரித்திருப்பதை ஆதாரபூர்வமாக விளக்கினார். லஞ்ச சம்வாங்கி அதனால் டிஸ்மிஸ் செய்யப்பட்ட [illegible] டர் கணபதி [illegible] வர்கள் மீண் [illegible] கொடுத்து [illegible] டதை அம் [illegible]

ஆறு மாத போனஸ் கொடுக்க கோரிக்கை

நெல்லிக்குப்பம், ஜூலை 15—

இங்குள்ள பாரி சர்க்கரை ஆலை (இ. ஐ. டி. அன்ட் எஸ். எப். லிமிட்டட்) தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 9-7-52ல் நடைபெற்றது. நிர்வாகம் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. உத்தேச வருஷ வருமானத்தில் (சம்பளமும், பஞ்சப்படியும் சேர்த்து) பாதியை போனசாக சகல தொழிலாளிகளுக்கும் கொடுக்கவேண்டும்.
2. 1949-ல் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களில் திரும்பி எடுக்கப்படாத 7 பேர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்கவேண்டும். ஏற்கெனவே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 7 பேர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்க வேண்டும்.
3. 1946-க்கு பிறகு நிரந்தரமாக்கப்பட்ட சுமார் 400 தொழிலாளிகளுக்கும் மற்றவர்களுக்கு உள்ளதுபோல் பண்டிகை விடுமுறையும், ஞாயிற்றுக்கிழமைச் சம்பளமும் கொடுக்க வேண்டும்.
4. ரிடையரான தொழிலாளிகள், திடீரென்று இறந்த தொழிலாளிகளின பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க ஒப்புக் கொண்டதுபோல் நிர்வாகம் சரிவர நடத்த வேண்டும்.
5. 1951ல் தொழிலாளர்கள் கோரியது போல் சம்பள உயர்வு, வேலை உயர்வு கொடுத்தல்.
6. தண்டனையளிப்பதற்கு முன்பு சங்க பிரதிநிதிகள் தொழிலாளிகளின சார்பில் விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.

பஞ்சப்படிபுள்ளிக்கு 4அ[illegible] வீதமும், சாதாரண தொ[illegible] லாளிக்கு தினக்கூலி [illegible] திறனை [illegible] ளிக்கு [illegible]

யாருக்கு போலீஸ் பாதுகாப்பு?

நாமக்கல், ஜூலை 14—

நாமக்கல் தொகுதியில் காங்கிரசை எதிர்த்து நின்று கம்யூனிஸ்ட் கட்சி, தி. க. உதவியுடன் வெற்றிபெற்ற சட்டசபை மெம்பர் பொன்னு என்ற ஆர். ரெங்கசாமி, ராஜாஜி நம்பிக்கைத் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டளித்தார் என்று தெரிந்ததும் அவருக்கு ஓட்டுப் போட்ட அந்தத் தொகுதி மக்களுக்கு வந்த கோபம் அளவு கிடையாது.

இந்த அதிருப்தியைக் கண்டதும், டிப்டி போலீஸ் சூப்பிரண்டு 4 தினங்களுக்கு முன்னால் இன்னும் கம்யூனிஸ்ட் கமிட்டி காரியதரிசியையும், தி. க. கமிட்டித் தலைவரையும் கூப்பிட்டனுப்பி, பொன்னுவை கண்டித்து கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்த திட்டமிட்டால் [illegible] அறிவித்துவிட்டு [illegible] படி கேட்டுக் கொ[illegible]ராம். ([illegible]—நி)

வீடுதான் முதல்!

தூத்துக்குடி, ஜூலை 16—

இவ்வூர் துறைமுக பங்களாவிற்கு தென்புறமுள்ள காலி நிலத்தில் பூங்கா ஏற்படுத்துவது என்று துறைமுக போர்டு முடிவு செய்துள்ள[illegible] கண்டித்து த. நா. தொ. [illegible] கிரஸ் உறுப்பினர் [illegible] சி. ஏ. முருகானந்தம் [illegible] அறிக்கை விடுத்துள் [illegible]

[illegible] தன்னுடைய அறிக் [illegible] உத்தேச இடத்திற்கு [illegible] யே ஒரு பூங்கா [illegible] ஆகவே புதிய [illegible] வேண்டிய அவ [illegible] ற்குப்பதிலாக [illegible] 100 துறை [illegible] வீடு கட் [illegible] டுமென்று

சேலம் பீடித் தொழிலாளர் மகாநாடு

சேலம், ஜூலை, 16—

சேலம் பீடித் தொழிலாளர் சங்கத்தில் முதலாவது மகாநாடு 27-7-52ல் நடைபெறுமென்றும், மகாநாட்டில் தோழர் மணலி கந்தசாமி கலந்துகொள்வார் என்றும், வாரத்திற்கு 6 நாட்கள் வேலை பெறுவது, கூலிஉயர்வு, பாக்டரி ஆக்ட அமுல் செய்யப்படுதல் முதலிய பிரச்னைகள் விவாதிக்கப்படும் என்றும், மகாநாட்டிற்கு பொதுமக்களும் தொழிலாளிகளும் தாராளமாக நன்கொடையளிக்கவேண்டுமென்றும் மகாநாடு வரவேற்புக் கமிட்டி அறிக்கை விடுத்துள்ளது. நிதி அனுப்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு பணம் அனுப்பும்படியாக கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கே. செல்லப்பன்,
47, டி. பார்க் தெரு
சேலம் டவுன்.

ஜப்பானிய 'சமாதான' ஒப்பந்தம்பற்றி பணிக்கர்

புதுடில்லி, ஜூலை 16—

"தூரக் கிழக்குப் பிராந்தியத்தில், சீனாவைப் புறக் கணித்துவிட்டு செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் யதார்த்த நடைமுறைக்குப் புறம்பானது. இது நெருக்கடியைக் குறைப்பதற்குப் பதிலாக தீவிரப்படுத்தவே செய்யும்" என்று சீனாவில் இந்திய ஸ்தானீகராக இருந்த சர்தார் பணிக்கர் சான்பிரான்சிஸ்கோவில் கையெழுத்திடப்பட்ட ஜப்பானிய சமாதான ஒப்பந்தம்பற்றி குறிப்பிடுகையில் இவ்விதம் கூறினார்.

வாழ்த்துகின்றோம்

போடி, ஜூலை, 16—

"அருமைத் தாய் நாட்டின் மீது ஆக்ரமிப்புக் கரங்களை வீசித்து நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்ய, நிலப் பிரபுத்வத்தின் இரும்புப் பிடியை மேலும் பலப்படுத்தும் காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து தீவிரமாகப் போராடும் ஜனசக்தியே நீவெல்க! நீடூழி வாழ்க!

பி. என். அண்ட் சன்ஸ் தொழிலாளர்கள்.

விவசாய சங்க ஊழியர் கூட்டம்


சிவகங்கை, ஜூலை 13—

சம்பராய நேந்தல் கிராமத்தில் சிவகங்கை தாலூகா ஊழியர் கூட்டம் 11ந் தேதி நடைபெற்றது. சுமார் 30 பிரதிநிதிகள் வந்திருந்தனர். பல கிராமங்களிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள் தங்கள் ரிபோர்ட்டுகளைக் கொடுத்தவுடன், த. நா. விவசாயிகள் சங்கக் காரியதரிசி தோழர் பி. சீனிவாசராவ் விவசாய பிரச்னைகள் பற்றியும், இயக்கத்தை கட்டவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கிப் பேசினார். சில கேள்விகளுக்கு பதில் கூறுகையில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் ஒரு ஜனநாயக வெகுஜன ஸ்தாபனமென்றும், அதில் எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்றார்.

ஏற்கனவே நீர்ப்பாசன வசதி குறைவாயுள்ள இந்த தாலூகா வைகைத் திட்டத்தால் பாதிக்கப்படுமென்றும், அதை எதிர்த்து நீண்ட இயக்கம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தோழர் ஜீவா சுற்றுப் பிரயாணம்

20—7—52 } ... மதுரை
21—7—52 }
22—7—52 ... கடலூர்



தோழர் ராமமூர்த்தி

20—7—52 ... மதுக்கரை

தோழர் கல்யாணசுந்தரம்

20-7-52ல் ஈப்பூர் ராமலிங்கம் செட்டியார் மைதானத்திலும், 21-7-52ல் பொனமலையிலும் பேசுவார்.

Edited, Printed & Published by S. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, 38, Mount Rd, Madras 6.